Alternatives India
VIKALP sangam

மேற்கு இமயப்

பகுதியில்

பெருந்தொற்றுக்கு எதிரான நெகிழ்வுறுதி

மூன்றாம் தொகுப்பு

சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்

பிப்ரவரி 2021

உள்ளடக்கம்

அறிமுகம்
ஏன் மேற்கு இமயப்பகுதிமீது கவனம் செலுத்த வேண்டும்? 01

1. பாகேஷ்வர் கதை
உள்ளூர் மக்களும் புலம்பெயர் மக்களும் பாகேஷ்வரில் உள்ள பள்ளியைச் சீரமைத்து கணினிமயமாக்குகின்றனர் 04

2. உத்தராகண்டிலுள்ள மகிளா உமாங்க் சமிதி
உத்தர்காண்டின் மகிளா உமாங்க் சமிதியைச் சேர்ந்த பெண்கள் வழிநடத்துகின்றனர் 07

3. இயற்கை வழிகாட்டித் திட்டம்
பெருந்தொற்றின் போதும் பயில்தல் தொடர்கிறது: உத்தர்காண்டின் இளம் இயற்கை வழிகாட்டிகள் 09

4. ஓவர்லேண்ட் எஸ்கேப்
சுற்றுலா நிறுவனம் லடாக்கில் வீட்டுச்சேவை நோக்கித் திரும்பியது 11

5. முன்சியாரியின் மக்கள்
முன்சியாரியின் மக்கள் நெகிழ்வுறுதி என்றால் என்னவென்று காட்டுகின்றனர் 13

6. ஸ்பிட்டியின் மக்கள்
பெருந்தொற்றை எதிர்கொள்ளும்பொருட்டு தன்னாட்சியை மேற்கொண்டுள்ளனர் ஸ்பிட்டியின் மக்கள் 16

7. மக்கள் அறிவியல் நிறுவனம்
உத்தர்காண்டின் ஊற்றுகளைப் பெண்கள் மீட்டுள்ளனர் 19

8. மேரு, ஹனுப்பட்டா கிராமங்களில் பனிச்சிறுத்தைப் பாதுகாப்புக்கான ஆதரவு
லடாக்கில் உள்ளூர் பெண்களும் புலம்திரும்பிய தொழிலாளர்களும் வளங்குன்றா வாழ்வை நோக்கி நகர்கின்றனர் 22

9. கங்காவின் (Kanga) வளரிளம் பெண்கள்
பெருந்தொற்றின்போது கங்காவின் வளரிளம் பெண்களின் கதை 24

10. காஷ்மீரத்துப் பறவைகள் - சூழல்நலச் சுற்றுலா, வாழ்வாதார மாற்று
காஷ்மீரத்துப் பறவைகள் சூழல்நலச் சுற்றுலாவுக்கும் வாழ்வாதாரத்துக்கும் வழிவகுக்கின்றன 27

அறிமுகம்

ஏன் மேற்கு இமயப்பகுதிமீது கவனம் செலுத்த வேண்டும்?

இந்திய இமயப் பகுதி 12 மாநிலங்களை உள்ளடிக்கியிருப்பினும், மேற்கு இமயப் பகுதி இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், லடாக், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களைக் கொண்டதாக உள்ளது. இந்திய இமயப்பகுதி 5.1 கோடி மக்களையும் பலவகைப்பட்ட தாவரங்களையும் விலங்குகளையும் கொண்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதிக்கு நீரை வழங்குகிறது; உயர்ந்த மலைச் சிகரங்களையும், மிடுக்கான நிலத்தோறங்களையும், வளமான பண்பாட்டையும் மரபையும் தன்னகத்தே கொண்டது.

பருவச்சூழல் மாற்றத்தின் அறிகுறிகளை மலைகளே முதலில் வெளிப்படுத்துகின்றன. பனிப்பாளங்கள் பின்னடைவது ஆறுகளின் திசைமாற்றத்தைக் குறிக்கின்றன; அதன் விளைவாக பன்மயச்சூழல், வாழ்வாதாரம், மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு ஆகியவற்றில் மாற்றங்கள் விளைகின்றன. இமய மாநிலங்கள் பருவச்சூழல் மாற்றம், நிலச்சீர்கேடு, அதிகப்படியான சுரண்டல், இயற்கைப் பேரழிவுகள் ஆகியவற்றால் உலகிலேயே மிக அதிக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் ஒன்றாக உள்ளன.

மலைகள் போக்குவரத்தையும் கடினமாக்குகின்றன. தகவல் பரிமாற்றம் எப்போதும் எளிமையானதன்று; ஆனால் மக்கள் சரியான தகவல்களைப் பெறுவதை மலைகள் மேலும் கடினமாக்குகின்றன. மோசமான இணைய இணைப்பு, இலக்கமுறை இடைவெளி, எட்டாத் தொலைவு ஆகியவை இடர்களைப் பெரிதாக்குகின்றன. பொருளாதார வளர்ச்சியுறா நாடுகளின் மலைப்பகுதிகளில் வாழும் மக்களில் மூன்றில் ஒருவர் வறுமையையும், உணவுத் தட்டுப்பாட்டினையும், தனிமையையும் சந்திக்க நேரிடலாம் என்று கூறப்படுகிறது.

பிரித்தானியர்கள் நைனித்தால், முசோரி, சிம்லா போன்ற மலைத்தலங்களையும், கோடை விடுதிகளையும் இப்பகுதியில் அமைத்தது முதலே சுற்றுலாத்துறை இங்கு முகிழ்த்தது; இவ்விடங்கள் பெரும் சுற்றுலாத் தலங்களாக இன்று உருவெடுத்துள்ளன. பத்ரிநாத், சார் தாம், கேதாரிநாத் போன்ற புண்ணியத்தலங்களும் இப்பகுதியில் அமைந்துள்ளன. சுற்றுலா வளர்ச்சிக்குச் செறிவான வாய்ப்புகள் இருப்பதால், தற்சார்பு, தாங்கும் கொள்திறன், சூழல்நலச் சுற்றுலா ஆகியவை முதன்மையுறுகின்றன. கழிவு மேலாண்மை, சுற்றுலாப் பயணிகள் வரவால் அதிகரிக்கும் நெகிழிப் பயன்பாடு ஆகியவை குறித்த மிகுந்த கவலையும் நிலவுகிறது. சமூகக்குழு சார்ந்த சுற்றுலா இவற்றுக்கு மாற்றான, வளங்குன்றாத் தன்மைகொண்ட சுற்றுலா முறையாகக் கருதப்படுகிறது; இதன்மூலம் இல்லவிடுதிகள் மூலம் உள்ளூர் சமூகக்குழுக்களுக்கு தொழில்முனைப்பு வருமானம் கிட்டும்.

இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளைப் போலவே, இமயப் பகுதியும் வேளாண்மை சார்ந்தே உள்ளது. ஆனால் வேளாண்மை வணிகமயமானதாலும், பணப்பயிர்ப் பெருந்தோட்டங்கள் பெருகுவதாலும் உள்ளூர்ச் சமூகக்குழுக்கள் தங்கள் வாழ்விடத்திலிருந்து அந்நியப்பட்டிருக்கின்றன. வரலாற்றுரீதியாக முல்லைத்திணை வாழ்வும் மேய்ச்சல் விலங்குகளை வெவ்வேறு இடங்களுக்கு மேய்க்க அழைத்துச் செல்வதும் இப்பகுதியில் இன்றியமையாத பொருளாதார நடவடிக்கைகளாக இருந்தன. சொத்துரிமையும் வனச்சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், வான் குஜ்ஜர்கள் போன்ற பல மேய்ச்சல் சமூகங்கள் வாக்குரிமையின்றி, வீடும் மின்சாரமும் அற்றுப்போனதை உணர்ந்தனர்! சட்டத்துக்குப் புறம்பாகக் குடியேறியவர்களாகக் கருதப்படுவதால், காடுசார் சமூகக்குழுக்கள் தொடர்ந்து இழப்புகளைச் சந்தித்துவருகின்றனர்; நடுவண் அரசும் மாநில அரசுகளும் அவர்களது இடப்பெயர்வை மட்டுப்படுத்தி, எங்கேனும் குடியமர்த்துவதிலேயே தொடர்ந்து குறியாக இருந்திருக்கின்றன.

சவால்கள்

இப்பகுதி பல சவால்கள் நிறைந்தது. போக்குவரத்து வசதியின்மை, எட்டாத்தொலைவுகள், இயற்கை அழிவுகள் எளிதில் ஏற்படும் வாய்ப்பு, பருவச்சூழல் மாற்றம் பாதிக்கும் வாய்ப்பு, நிலைகுலைக்கும் சுற்றுலா முறையும் கழவு மேலாண்மையும், உயிர்ப்பன்மயம் குன்றுதல், வாழ்வாதார வாய்ப்புகளின்மை வேலைவாய்ப்பின்மை, கிராம இளைஞர் புலம்பெயர்வதால் ஆளரவமற்ற பேய்க்கிராமங்கள் உருவாதல், உணவுப் பாதுகாப்பின்மை போன்றவை அச்சவால்களில் சில. அண்மைய ஆய்வுகளில் வெள்ளம், நிலச்சரிவுகள், வறட்சி ஆகியவை இப்பகுதியில் அதிகரித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. மனித-விலங்கு மோதல்கள், இயற்கைச் சுனைகள் வற்றுவதால் ஏற்படும் நீர்ப் பாதுகாப்பின்மை, நிலவளம் குன்றுதல், சமூக மக்கள்தொகையில் மாற்றங்கள் போன்ற பருவச்சூழல் சாராத பிற பிரச்சனைகளும் உள்ளன. உதாரணமாக, வேளாண்மையில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றபோதும் இப்பகுதியில் மரபான மலைவாழ்சமூகங்களில் பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்படுகிறது. ஆண்கள் பெருமளவு புலம்பெயர்வதால், இப்பகுதியில் பெரும்பாலான பெண்கள் எந்தவிதமான சமூக, பொருளாதார, சட்டப்பூர்வமான ஆதரவும் இல்லாமல் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்கு இமய விகல்ப் சங்கமும், இமயக் கூட்டுறவுக்குழுமமும் (WHVS - மே.இ.வி.ச.)

விகல்ப் சங்க நடவடிக்கைகளின் பகுதியாக, இமயப்பகுதியிலிருந்து மட்டுமின்றி பிறபகுதிகளிலிருந்தும் ஆய்வாளர்களையும், செயல்பாட்டாளர்களையும், சிந்தனையாளர்களையும் மாற்றுமுயற்சிகளில் பணிபுரியும் பிறரையும் இப்பகுதியைப் புரிந்து கொள்ளவும், மலை மாநிலங்களுக்கு மாற்று எதிர்காலத்தை ஏற்படுத்த ஒன்றிணைந்து செயல்படவும் மேற்கு இமய விகல்ப் சங்கம் என்ற கூடுகையாக ஒருங்கே கூட்டியுள்ளது. இப்பகுதியின் அமைப்புகளும் தனிநபர்களும் சந்தித்த முதல் கூடுகை 2016 ஆகஸ்டு மாதம் இமாச்சல பிரதேசத்தின் பாலம்பூரில் நடைபெற்றது. சம்பாவனா, ஜகோரி, மான்கள் பூங்கா, கல்பவிருக்ஷ் ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்ட இச்சங்கத்தில் 10 அமைப்புகளிலிருந்து 25 பேர் பங்கேற்றனர். இரண்டாவது கூடுகை இமாச்சல பிரதேசத்தின் ஜகோரி வளாகத்தில் 2018 நவெம்பர் மாதம் ஜகோரி ஊரகம், மக்கள் அறிவியல் நிறுவனம், இந்திய பனிச்சிறுத்தை பாதுகாப்பு அறக்கட்டளை, லடாக் கலை ஊடக அமைப்பு (LAMO), சம்பாவனா, மூல் வளங்குன்றாமை ஆய்வு மையம், டிட்லி அறக்கட்டளை, மாட்டி கூட்டுறவுக் குழுமம், சாதேத், ஊரக வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழலுக்குமான பள்ளி, கல்பவிருக்ஷ் ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்டது.

மே.இ.வி.ச.த்தின் நோக்கம் வளர்ச்சி குறித்தான மாற்றுப் பார்வையை நோக்கி ஒன்றிணைந்து பணிசெய்ய மக்களையும் அமைப்புகளையும் இணைத்து வலுப்படுத்துவதே ஆகும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிப் பார்வைக்கான தேவையை மே.இ.வி.ச. உணர்கிறது. சூழலியல் வளங்குன்றாமை, சமூக நலமும் நீதியும், அதிகாரம் பகிரப்பட்ட நேரடியான மக்களாட்சி, பொருளாதார மக்களாட்சி, பண்பாட்டுப் பன்மயம், அறிதலில் ஜனநாயகம் போன்றவற்றைப் புரிந்துகொள்ளும் தேவையுள்ளது.

இமயக் கூட்டுறவு குழுமம் 2019ம் ஆண்டு நடைபெற்ற மேற்கு இமய விகல்ப் சங்கத்தில் நடந்த உரையாடல்களின் விளைவாக உருவானது. மேற்கு இமயப் பகுதியில் வாழ்ந்தும் செயல்பட்டும் வரும் தனிநபர்களுக்கும் அமைப்புகளுக்குமான பொதுவளத் தளமாக இது உள்ளது. சமச்சீர்மையற்ற தகவல் இடைவெளியைக் கடப்பதையும் மலைப்பகுதியில் வாய்ப்புகள் பற்றிய தகவல்களை எளிதில் எல்லாருக்கும் கிடைக்கச் செய்வதையும் இக்குழுமம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

பொதுமுடக்கமும் பொதுமுடக்கக் கதைகளும்

கோவிட்-19 பெருந்தொற்று உலகைத் தாக்கியபோது, இப்பகுதியும் இதன் மென்தன்மைகளும் வெளிப்படுத்தப்பட்டன - பள்ளிகளும் பொதுச்சொத்துகளும் வெள்ளங்களால் பாதிக்கப்பட்டன; புலம்பெயர் தொழிலாளர்கள் பெருமளவு புலம்திரும்புதல் நிகழ்ந்தது; சுற்றுலாக்கள் முற்றிலும் முடங்கி இளைஞர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்தனர். பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரம் சுற்றுலாவைச் சார்ந்திருக்கும்போது, உலகளாவிய பெருந்தொற்றால் பயணங்கள் கட்டுப்படுத்தப்படுவதைக் கற்பனை செய்துபாருங்கள்! உலகம் முழுதும் சுற்றுலாத்துறை பேரிழப்பினைச் சந்தித்தது. வளரும் சுற்றுலாத்துறையும் சமூகக்குழுசார் சுற்றுலாவும் கொண்ட மேற்கு இமயப் பகுதி கடுமையான வாழ்வாதார இழப்புகளைக் கண்டது. எனினும் நெகிழ்வுறுதியும் இடர்களை எதிர்கொள்தலும் தொடரத்தான் செய்கின்றன.

இந்த ஆவணத்தில் இப்பகுதியிலிருந்து தளராத உழைப்பையும், நெகிழ்வுறுதியையும் உளத்திடத்தையும் வெளிப்படுத்தும் கதைகளைத் தொகுத்துள்ளோம். ஒரு கிராமத்திலிருந்த ஒரே பள்ளியை வெள்ளம் அழித்தபோது, உள்ளூர் மக்களும் புலம்பெயர் மக்களும் ஒன்றாகப் பணியாற்றி அப்பள்ளியைச் சீரமைத்தனர். சுற்றுலா முற்றிலும் நின்றுபோன போது, ஒரு சுற்றுலா நிறுவனம் தனது ஊழியர்களுக்கு வீட்டிலேயே பொருள்களைக் கொண்டு கொடுத்துக் காத்தது. இன்னொரு சமூகக்குழு குறைந்தபட்ச தற்சார்பு வேளாண்மையை மேற்கொண்டு இலக்கமுறைப் படிப்பறிவை வளர்ப்பதில் கவனம் செலுத்தினர். சமூகப் பணியும் ஆதரவும் எல்லாத்தடைகளையும் தாண்ட உதவும் என்று காட்டும் இக்கட்டுரைகள் மிகுந்த நம்பிக்கையூட்டுகின்றன.

தொடர்பு கொள்ள:

இக்கட்டுரைகள் குறித்த மேலதிகத் தகவல்களுக்கு:
ஆத்யா சிங், aadyasingh@gmail.com அல்லது aadya@iabtfoundation.org,
ரித்விகா பத்கிரி, ritwikapatgiri5@gmail.com.

1. பாகேஷ்வர் கதை

உள்ளூர் மக்களும் புலம்பெயர் மக்களும் பாகேஷ்வரில் உள்ள பள்ளியைச் சீரமைத்து கணினிமயமாக்குகின்றனர்

ஒளிப்படம்: ஆதர்ஷ் கிருஷ்ணன்

நகர வாழ்வின் சலசலப்புகளுக்கு அப்பால், காரூர் கங்கை நதிக்கரையோரம், உத்தராகண்ட் மாநிலத்தில் காரூர் வட்டத்திலுள்ள இமயமலைப் பகுதியில் உள்ளது சிம்கேத் கிராமம். மும்பை இந்திய தொழில்நுட்ப நிறுவனம், தேசிய நீரியல் நிறுவனம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய ஆய்வின்படி இந்தியாவில் மழைப்பொழிவின் பருவங்கள் பருவச்சூழல் மாற்றத்தால் மாறிவருகின்றன. பருவச்சூழல் மாற்றத்தின் பாதிப்புகள் இமயப்பகுதியில் எப்போதும் பலமாக இருந்துள்ளன. அறிவியல் ஆய்வுகள் இப்பகுதியில் பெருமழையும் வெள்ளப்பெருக்கும் அதிகரிக்கும் என்கின்றன. 2019 நவெம்பர் மாதம் நேர்ந்த உள்ளூர் வெள்ளமொன்று சரசுவதி சிசு மந்திர் பள்ளியை அடித்துச் சென்று, அதன் நூலகத்தையும் நான்று வகுப்பறைகளையும் அழித்தது. மிக மோசமான நிலையில் பள்ளி இருந்தபோதும் குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்கு வந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை. பள்ளியைப் புனரமைக்க அதிகாரப்பூர்வமான திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால், பெருந்தொற்று தொடங்கியதும் அவை கிடப்பில் போடப்பட்டன.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

கொரோனா தொற்றும் பொதுமுடக்கமும் தொடங்கிய பிறகு, நகரங்களில் அமைப்புசாரா பணிகளில் இருந்த புலம்பெயர் தொழிலாளர்கள் தமது கிராமங்களுக்கும் திரும்பிய போது, அவர்களைத் தனிமைப்படுத்துவதற்காக இப்பள்ளி பயன்படுத்தப்பட்டது. பள்ளியின் மிக மோசமான நிலையைக் கண்ட புலம்பெயர் தொழிலாளர்கள் துணுக்குற்றனர். அவர்களில் பலரது குழந்தைகளும் அப்பள்ளியில் படித்துவந்தனர். பள்ளிக்கு இலவசமாக வண்ணச்சாயம்பூச முடிவுசெய்தனர். உள்ளூர் மக்களும் கிராமத்துக்குத் திரும்பிய புலம்பெயர்ந்தவர்களும் பொதுமுடக்கக் காலத்தைப் பள்ளியை புனரமைக்கப் பயன்படுத்தலாம் என்பதை உணர்ந்தனர். ஆனால் அதற்கான நிதி அவர்களிடம் இல்லை.

ஒளிப்படம்: ஆதர்ஷ் கிருஷ்ணன்

உத்தராகண்ட்டில் வளர்ச்சிப்பணிகளில் சில ஆண்டுகளாக ஈடுபட்டுவரும் ஆதர்ஷ் கிருஷ்ணன், புஷ்கர் பிஸ்ட் ஆகிய இரு நண்பர்கள் இப்பள்ளியைப் புனரமைப்பதற்காக உள்ளூர் மக்களுக்கு உதவ முன்வந்தனர். ஆதர்ஷ் அவ்தாஸ் என்ற அமைப்பின் நிறுவனர்; இது சிறு குறு விவசாயிகளோடு பணியாற்றுகிறது. புஷ்கர் பாரதிய வேளான்-தொழில்துறை அறக்கட்டளையில் பணியாற்றுகிறார். அவரே உள்ளூர்காரர்தான். அவரது குடும்பத்தினர் 1995ல் பள்ளி கட்டுவதற்காக நிலம் கொடையளித்துள்ளனர். வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்புகளிலிருந்து மீள்வதோடு அடிப்படை உள்கட்டமைப்பும் பள்ளியில் போதுமானதாக இல்லை என்பதை அவர்கள் கண்டனர். “2019ம் ஆண்டின் வெள்ளத்துக்குப் பிறகு, பள்ளி முழுதும் குப்பைகூளங்களால் நிறைந்தது. கட்டடம் முற்றிலுமாகச் சேதமாகியது,” என்றார் புஷ்கர்.

“ஆசிரியர்கள் அமர்வதற்குப் பள்ளியில் நாற்காலிகள்கூட இல்லை,” என்றார் ஆதர்ஷ். பள்ளி வளாகத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டபோது, பிற கட்டமைப்புகளைக் கொண்டுவருவதும் கணினிமயமாக்குவது கிருஷ்ணனுக்கும் பிஷ்டுக்கும் நோக்கங்களாக இருந்தன.

“கணினிக் கல்வி அளிக்கக்கூடிய பள்ளிகள் 20-25 கிலோமீட்டர் விட்டத்தில் வேறு எவையுமே இல்லை. கல்விப்பணியும் விளையாட்டும் எதிர்காலத்தில் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புள்ள இரண்டு துறைகள்,” என்றார் ஆதர்ஷ். குழந்தைகள் பெரும்பாலும் கொக்கோ போன்ற விளையாட்டுகளை விளையாடினர்; பிற விளையாட்டுகளில் ஈடுபட அவர்களுக்குப் போதிய சாதனங்கள் இல்லை. நல்ல நோக்கம் கொண்ட நற்பணிகளுக்கும் நிதித்தேவை உண்டு - எல்லா புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ள 4 லட்சம் ரூபாய் தேவைப்படும். அரசாங்கத்திடம் உதவி கோரியபோது கிடைக்கவில்லை. பின்னர் இருவரும் மிலாப்(Milaap) தளத்தில் மக்கள் பங்களிப்புப் பக்கத்தை உருவாக்கி, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள கொடையாளர்களிடமிருந்து கணிசமான தொகையைப் பெற்றனர் (திட்டமிட்ட தொகைக்குக் குறைவாக இருந்தபோதும்). பணி தொடங்கியது. உள்ளூர்மக்களும் புலம்பெயர்ந்தோரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு புனரமைப்புப் பணியை முழுமைசெய்துள்ளனர்.

பள்ளிப் புனரமைப்புப் பணிக்கு நாள்தோறும் புதிதுபுதிதாக பணியாளர்கள் வந்தனர். குறிப்பிட்ட ஆட்களோ நேரமோ எதுவும் இல்லை. பணியாளர்கள் எல்லாச் சாதிகளிலிருந்தும் வந்தனர். தங்களது குழந்தைகளின் எதிர்காலம் மேன்மையுற ஒன்றாக உழைத்தனர். தன்னுறுதியோடும் தன்னம்பிக்கையோடும் இப்பணி நிறைவேற்றப்பட்டது. எல்லாப் பணியாளர்களும் வேளாண்மை சார்ந்து இருந்ததால், பள்ளியைத் தங்களது குழந்தைகளின் எதிர்காலத்திற்கு இன்றியமையாததாகக் கருதினர். கணிப்பொறிகள், ஒளிப்படக்காட்டி, அச்சியந்திரம், அலமாரிகள், விளையாட்டுச் சாதனங்கள், வெண்பலகை ஆகியவை வழங்கப்பட்டு பள்ளி இலக்கமுறைக்கு வந்தது.

படிப்பினை

பொதுமுடக்கக் காலம் புலம்பெயர்ந்தவர்களுக்குக் கடினமான காலம். இமயப்பகுதியில் புலம்திரும்புதல் பெருமளவு நிகழ்ந்தது. அப்பகுதியிலிருந்த ஒரே பள்ளியின் பாழ்நிலை உள்ளூர் மக்கள் அதனைச் சீரமைக்கத் தூண்டியது. தொழில்முனைப்பும் தொழில்நுட்ப அறிவும் சமூகத்தை மக்கள் பங்களிப்பு கோரி பள்ளியை இலக்கமுறையாக்கவும் புனரமைக்கவும் உதவின. பெருந்தொற்றால் எல்லாமே இருண்டிருந்தபோது, பள்ளியின் புனரமைப்பும், கணினிக் கல்வியை அறிமுகப்படுத்தியதும் சாதகமான சமூக மாற்றங்களாகக் காணலாம்.

தொடர்புக்கு

ஆதர்ஷ் கிருஷ்ணன், Adharsh Krishnan, adarshkrishnancivil@gmail.com

ஒளிப்படம்: ஆதர்ஷ் கிருஷ்ணன்

2. உத்தராகண்டிலுள்ள மகிளா உமாங்க் சமிதி

உத்தராகண்டின் மகிளா உமாங்க் சமிதியைச் சேர்ந்த பெண்கள் வழிநடத்துகின்றனர்

ஒளிப்படம்: கல்யாண் பால்

மிகவும் மென்மையான, எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய இமயச் சூழியலமைப்பு வளங்குன்றா குறிஞ்சித்திணை வேளாண்மை முறைகளின் மீது எதிர்மறை பாதிப்பைச் செலுத்தியுள்ளது. இதனால் உணவுப் பாதுகாப்பு குன்றி, ஆண்களும் இளைஞர்களும் புலம்பெயர்தல் அதிகரித்துள்ளது. வேளாண்மையில் பெண்கள் மேலும் மேலும் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். மகிளா உமாங்க் சமிதி என்பது மகளிர் சுயவுதவிக் குழுக்களின் கூட்டமைப்பாக உருவானது. இத்தகைய பெண் விவசாயிகளின் நலன்களைக் காப்பதற்காகவும் பிற வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் பொருளாதார வளத்துடன் நீடிக்கச்செய்யவும் இக்கூட்டமைப்பு உருவானது. மரபான வங்கி அமைப்பைப் பற்றி அறிந்திராத, அவற்றிலிருந்து விலக்கப்பட்டுள்ள பெண்களுக்கும் உழத்திகளுக்கும் பொருளாதார சேவைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் சேமிப்பை ஊக்குவிப்பதும் இதன் நோக்கங்கள். டிசெம்பர் 1999ம் ஆண்டு தொடங்கப்பட்ட உமாங்க் நைனித்தால், அல்மோரா, பாகேஷ்வர் ஆகிய பகுதிகளிலுள்ள 100 கிராமங்களிலுள்ள பெண்களைச் சென்றடைகிறது.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

பொதுமுடக்கம் தொடங்கிய பிறகு, உமாங்கின் பெண்கள் பெருந்தொற்றைச் சமாளிப்பது எப்படி என்ற உரையாடலைத் தொடங்கினர். பல ஆண்டுகளாக இதுபோன்ற கடுமையான காலங்களுக்காகச் சேமித்துவைத்த தொகையிலிருந்து ஆண்டுதோறும் பெண்கள் ஒவ்வொருவருக்கும் 10-12 லட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது. “இதைவிடவும் மோசமான காலம் இனி வராது என்பதை நாங்கள் அறிந்தோம்,” என்கிறார் உமாங்கின் உறுப்பினரான சுனிதா காஷ்யப். தங்கள் சேமிப்பின் ஒரு பகுதியைப் பிரித்தளிப்பது என்று முடிவு செய்தனர் - 850 பேருக்குத் 60 லட்சம் ரூபாயைப் பகிர்ந்தளித்துப் பெருந்தொற்றைக் கடக்க உதவுவது என்று ஒருமனதாக முடிவுசெய்யப்பட்டது.

இளவேனில் காலம் (ரபி பயிர்கள் அறுவடை) தொடங்கவிருந்ததால் சந்தைக்குப் பயிர்களையும் அனுப்பவேண்டும். ஆனால் பொதுமுடக்கம்

ஒளிப்படம்: சுனிதா காஷ்யப்

நிலவியதால் சந்தை என்று ஏதுமில்லை. பயிர்களைக் கொள்முதல் செய்வதற்கான செயல்முறை குறித்துக் கேள்விகள் இருந்தன. உள்ளூர்ச் சந்தைகளை உழத்திகள் தொடர்புகொண்டனர்; அவர்களைத் தொலைபேசிகளில் அழைத்தும் மின்னஞ்சல் செய்தும் பயிர்களை விற்பதற்கு உதவக் கோரினர். 419 உழத்திகள் ஒத்துழைக்க முன்வந்து, 12.5 லட்சம் மதிப்புள்ள வேளாண்பொருள்கள் அவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன. எவ்வெப்பகுதிகளில் என்னென்ன உணவுப்பொருள்களுக்குப் பற்றாக்குறை இருந்தது என்பதை ஆய்வுசெய்த பெண்கள் வெவ்வேறு பகுதிகளின் தேவைகள் வெவ்வேறாக இருந்தன என்பதை அறிந்தனர் - சில பகுதிகளில் பூண்டும், சில பகுதிகளில் ராஜ்மாவும் தேவைப்பட்டன. சந்தைப்படுத்தும் வழமுறைகள் எல்லாம் மூடப்பட்ட நிலையில், உள்ளூர் சந்தைகளில் இருந்து கிட்டிய நல்ல வரவேற்பால், பெண்கள் தங்களது பொருள்களை வீட்டுக்குவீடு சென்று வழங்க முடிவுசெய்தனர்.

தங்கள் பொருள்களை வீட்டில் வழங்கும் முறை உமாங்க் பெண்களுக்கு நன்றாகப் பயனளித்துள்ளது. இணையம்வழி வழங்குவதற்கான இணையதளம் ஒன்றையும் தொடங்கி, அதுவும் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

படிப்பினை

பொருளாதாரச் செயல்பாடுகளிலும் முடிவெடுத்தலிலும் பெண்களின் பங்கேற்பு இருப்பது அவர்களுக்கு அதிகாரம் வழங்கி வலுப்படுத்துவதோடு அல்லாமல் பிற நீண்ட கால நன்மைகளையும் கொண்டுள்ளது. நிதி மேலாண்மை செய்யவும் சேமிக்கவும் பெண்களின் திறன்களைப் பெருக்குவதும் நல்ல விளைவுகளை வழங்கியுள்ளது. தொழில்நுட்பத்தின் பங்கும் பெண்களின் கணினி அறிவும் முக்கியமானவைதாம்.

தொடர்புக்கு

சுனிதா காஷ்யப், Suneeta Kashyap,
suneetakashyap18@gmail.com

ஒளிப்படம்: ஆனந்த் அதிகாரி

3. இயற்கை வழிகாட்டித் திட்டம்

பெருந்தொற்றின் போதும் பயில்தல் தொடர்கிறது: உத்தராகண்டின் இளம் இயற்கை வழிகாட்டிகள்



ஒளிப்படம்: கேசர் சிங்

காடுகள் அழிக்கப்படுவதோடு வேளாண் விளைச்சலும் குறைந்துவரும் சூழலில், இமயப்பகுதியின் வேளாண்குடிகளும் காடுசார் சமூகங்களும் தங்களது மரபான வாழ்வாதாரங்களிலிருந்து விலக்கப்படுகின்றனர். எனவே, இப்பகுதியில் புலம்பெயர்தல் அதிகரித்துள்ளது. திட்லி அறக்கட்டளையும், சூழலியல் வளர்ச்சி மற்றும் ஆய்வு மையம் (செடார் - CEDAR) ஆகியவற்றின் ஆதரவுடன் இயற்கை வழிகாட்டித் திட்டம் தொடங்கப்பட்டது. இயற்கையோடு இயைந்த கிராம வாழ்வாதாரத் திட்டமாக உத்தராகண்ட்டின் மூன்று நிலப்பகுதிகளில் - முசோரி, பெனாக், ஜில்மில் ஜூல்-தனோ, முக்தேஷ்வர் - 2019 அக்டோபர் முதல் இது தொடங்கப்பட்டது. சமூகத்தில் இயற்கை சார்ந்த சூழல்நலச் சுற்றுலாவை சூழலியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நிலைத்த வாழ்வாதாரமாக முன்வைத்து உத்தராகண்டின் மூன்று கிராமத் தொகுதிகளில் திறன்வாய்ந்த, அர்ப்பணிப்பு நிறைந்த இயற்கை வழிகாட்டிகளை உருவாக்குவதே இதன் நோக்கம்.

இயற்கையோடு இணைக்கப்பட்ட வழிகாட்டுதலை வேளாண்மை மூலமாகப் பிற செயல்பாடுகள் மூலமாகவும் கிட்டும் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள அமைந்த வாய்ப்பாகக் கருதும் குடும்பங்களிலிருந்து பெரும்பாலான பயிலுநர்கள் வருகின்றனர். பெரும்பாலானவர்கள் வேளாண்மையிலும் வேளாண்மை சாராத் துறைகளான போக்குவரத்து, விடுதிகள் ஆகியவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். உத்தராகண்ட் வழங்கும் இயற்கையோடு இயைந்த வாழ்வாதார வாய்ப்புகள் அவர்களுக்கு உற்சாகமளிக்கிறது. பெருந்தொற்றுக்கு முன்னர், 2-3 வாரங்களுக்கொருமுறை நடந்த பயிற்சி வகுப்புகள் 3-4 மணிநேர களப்பயிற்சியைக் கொண்டிருந்தன. பறவைகளை அடையாளப்படுத்துதலும் பிற இயற்கை வரலாற்றுக் கூறுகளும் களப்பயிற்சியில் அடங்கும். செடிகளையும் விலங்குகளையும் அடையாளப்படுத்த உதவும் வழிகாட்டி நூல்களைப் பயன்படுத்துவது எப்படி என்பதும் பயில்நர்களுக்குக் கற்றுத்தரப்பட்டது.

பெருந்தொற்றுக்கு முன்னர், இயற்கை வழிகாட்டிகளுக்கான தொடக்கப்பயிற்சி 2019 அக்டோபரில் நடைபெற்றது. உறைவிடப் பயிலரங்குகளும் பயிற்சி நிகழ்வுகளும் 2020 மார்ச் வரை நடைபெற்றன. பின்னர் பெருந்தொற்று இயற்கையோடான மனித உறவுகளை உருமாற்றிவிட்டது.

ஒளிப்படம்: கேசர் சிங்

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

பெருந்தொற்று தொடங்கிய பிறகு, பிறவற்றைப் போலவே, சுற்றுலாப் பயணிகளின் வருகையும் மார்ச் மத்தியிலிருந்து நின்றுபோனது. எனினும், இயற்கை வழிகாட்டித் திட்டம் நின்றுபோய்விடவில்லை. முதல் மூன்று மாதங்களில் எந்த களப்பயிற்சியும் நடைபெறவில்லை. ஆனால் இயற்கை பற்றிய பயில்தலும் பயிற்சியும் தொடர்ந்தன. மார்ச் மத்தியிலிருந்து ஜூன் மாதம் வரை பயில்நர்கள் நேரில் சந்திக்க முடியாவிடினும், மெய்நிகர் பயிற்சிகள் தொடர்ந்தன. புத்தாக்கம் மூலமும் படைப்புத்திறன் மூலமும், நேருக்குநேர் சந்திக்க முடியாதபோதும் இயற்கையைப் பற்றிய பயில்தல் சாத்தியமாகியது.

“முன்பு நாங்கள் பறவைகள் மீது கவனம் செலுத்தினோம். ஆனால் மாறும் காலத்துக்கேற்ப, இப்போது தாவரங்கள், வண்ணத்துப்பூச்சிகள் மீது கவனத்தைத் திருப்பியுள்ளோம்,” என்கிறார் கேசர் சிங். இவர் 2014-15 முதலே இயற்கை வழிகாட்டித் திட்டத்தில் பணியாற்றிவருகிறார். முசோரியில் உள்ள கேசர் சிங்கும், ஜில்மில்லில் உள்ள தௌக்கீர் ஆலம் லோதாவும் பொதுமுடக்கத்தின் போது இந்நிகழ்வைத் தொடர்வதில் பெரும்பங்காற்றியுள்ளனர். சிங்கும் தௌக்கீரும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள். தங்கள் அறிதலைப் பகிர்ந்துகொள்வதிலும், இந்நிகழ்வுத் தொடர்வதிலும், பயிற்றுநர்களாகச் செயல்படுவதிலும் முக்கிய பங்கு வகித்துள்ளனர். வாட்சாப் குழுக்கள் மூலமாக பயில்நர்களோடு தொடர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். “அவர்களை நேரில் சந்திக்க இயலாவிட்டாலும், பயில்தல் தொடர்ந்தது. எனது ஒளிப்படக்கருவியில் ஒளிப்படங்கள் எடுத்து குழுவில் பகிர்வேன், சில சமயங்களில் இணையத்திலிருந்து படங்களைப் பகிர்வேன். ஆனால் எங்கள் செயல்பாடு நின்றுபோகவே இல்லை,” என்று கேசர் சிங் தொடர்கிறார்.

தங்கள் வாழிடங்களைச் சுற்றியுள்ள பறவைகளின் எண்ணிக்கையையும் பட்டியலையும் பயில்நர்கள் பகிர்ந்துகொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். தங்கள் கிராமத்துப் பறவைகள், தாவரங்கள், வண்ணத்துப்பூச்சிகள் ஆகியவற்றின் படங்களையும் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மெய்நிகர் வாட்சாப் குழுமத்தில் பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், மரங்கள் ஆகியவற்றை அடையாளப்படுத்துதல் குறித்த வினாடிவினா நடத்தப்பட்டது.

படிப்பினை

இயற்கை சார் வாழ்வாதாரங்கள் மெய்நிகர் வடிவங்களிலும் தொடரமுடியும். உள்ளூர் அறிதலும் படைப்பாக்கமும் பொருத்தமான தொழில்நுட்பமும் இதற்கு இன்றியமையாதவை.

தொடர்புக்கு

கேசர் சிங், Kesar Singh, 8477091851

4. ஓவர்லேண்ட் எஸ்கேப்

சுற்றுலா நிறுவனம் லடாக்கில் வீட்டுச்சேவை நோக்கித் திரும்பியது



ஒளிப்படம்: துண்டுப் தோர்ஜே

ஓவர்லேண்ட் எஸ்கேப் நிறுவனம் துண்டுப் தோர்ஜேவால் தொடங்கப்பட்டது. வெளிநாட்டுப் பயணிகளை விடுத்து உள்நாட்டுப் பயணிகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்திய முதல் நிறுவனங்களில் இது ஒன்று. இப்பகுதியில் செய்தித்தாள்கள் இல்லாத குறையை நீக்க, ரீச் லடாக் என்ற இலாபநோக்கற்ற செய்தித்தாளையும் கடந்த 8 ஆண்டுகளாக நடத்திவருகின்றனர். ஓவர்லேண்ட் எஸ்கேப்பின் இலாபத்திலிருந்து செய்தித்தாளுக்கான ஊதியம் வழங்கப்படுகிறது. சுற்றுலா நிறுவனத்திலும் செய்தித்தாளிலும் நேரடியாக 45 பேர் பணியாற்றிவருகின்றனர். மேலும் 150 பேர் மறைமுகமாகப் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். பெருந்தொற்று தொடங்கியபோது, இந்நிறுவனம் பேரிழப்புகளைச் சந்தித்தது. விமானப்பயணத்துக்காக முன்பதிவு செய்திருந்த தொகை திரும்பத் தரப்படவில்லை; பின்னர் செய்யும் பதிவுகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளமாறு கூறப்பட்டனர். பணம் முழுமையாகத் திரும்பவர இரண்டாண்டுகள் ஆகும். லடாக்கில் சுற்றுலா பெரிய தொழில்களில் ஒன்று; இது ஒரு நாளில் வளர்ந்துவிடவில்லை. இந்த இடத்துக்கு லடாக் வந்துசேரப் பல்லாண்டுகளாயின.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

கோவிட்-19 பெருந்தொற்று சுற்றுலாத்துறையை மிகவும் பாதித்துள்ளது. சுற்றுலாத்துறை சார்ந்து வாழும் பல்லாயிரம் மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். அண்மைக்காலங்களில் சுற்றுலாத்துறையில் பெருக்கம் கண்டுள்ள லடாக் மாதிரியான பகுதிகளில் பாதிப்பு மேலும் அதிகம். சுற்றுலா சார்ந்துள்ள பலரும் வேலையின்றிப் போயினர். ஓவர்லேண்ட் எஸ்கேப்பும் தங்கள் ஊழியர்களையும் தம்மையும் தற்காத்து நீடித்தல் சிரமம் என்பதைக் கண்டுகொண்டனர்.

ஒளிப்படம்: துண்டுப் தோர்ஜே

"பெருந்தொற்று தொடங்குவதற்கு முன்பிருந்த இடத்துக்கு மீள இன்னும் எத்தனை ஆண்டுகள் எடுக்குமோ, யார் கண்டது?" என்கிறார் தோர்ஜே. ஓவர்லேண்ட் எஸ்கேப், ரீச் லடாக் ஆகிய இரு நிறுவனங்களையும் சேர்ந்த ஊழியர்களின் இன்னல்களை அவர் அறிந்திருந்தார். அவர்களில் பலருக்கும் வேறு வாழ்வாதாரங்களே இல்லை. "எந்த வியாபாரமும் இல்லை. அவ்வளவுதான், எல்லாம் முடிந்தன. இனி எங்களால் ஊதியம் தரமுடியாது என்றானது," என்று தோர்ஜே நினைவுகூர்கிறார். "ஆனால் வேறு மாற்றுகளே இல்லை. நாங்களே வேறு யோசனை செய்யவேண்டியிருந்தது."

மாவட்ட நீதிபதியிடமிருந்தும் லடாக்கின் மலைக்குழுவிலிருந்தும் தில்லியிலிருந்து வரும் காய்கறிகளையும் மருந்துகளையும் விநியோகிக்கவேண்டும் என்ற செய்தி வந்தடைந்திருந்தது. தோர்ஜே தன்னிடம் அதற்குத் தேவையான ஆள்பலமும் வண்டிகளும் இருப்பதை உணர்ந்தார். "எங்களிடம் பணமில்லை. ஆனால் ஆள்பலம் இருந்தது," என்கிறார் தோர்ஜே. விரைவில் தொலைப்பேசிகள் நில்லாமல் ஒலிக்கத்தொடங்கின. விநியோக வியாபாரம் செழித்து வளர்ந்தது. வீட்டில் வழங்கும் சேவை என்பது லடாக்கில் இதுவரை நிகழாத ஒன்று. அதன் தொலைவுகளும் மலைப்பரப்பும் இத்தகைய வீட்டுச்சேவைக்குத் தடையாக இருந்தன. இத்தகைய வணிகத்துக்கான தேவையைப் பெருந்தொற்று காண்பித்தது.

இதைப் பயன்படுத்திக்கொண்ட தோர்ஜேவும் அவரது அணியினரும் பஞ்சாபிலிருந்தும் தில்லியிலிருந்தும் வந்த காய்கறிகளை விநியோகிக்கத்தொடங்கினர். வீட்டில் வழங்கும் சேவையை கோர்ட்ஸா என்றழைத்தனர். அதைப் பதிவுசெய்து, ஒரு இணையத்தளத்தையும் உருவாக்கினர். மளிகைக்கடைகளிலிருந்து கிடைத்த விற்பனைப் பங்கினைக் கொண்டு 45 ஊழியர்களையும் கவனித்துக்கொள்ள முடிந்தது.

படிப்பினை

பெருந்தொற்றின் போது மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளில் சுற்றுலாத்துறையும் ஒன்று. ஆனால், ஆள்பலம், திறன்கள், தொழில்நுட்பம் ஆகியவற்றை இத்துறையில் பயன்படுத்தித் தொடர்ந்து நீடிப்பதற்கான புதுமையான வழிகளை அடையமுடியும். புதுமையான, சிறு அளவிலான விநியோக சேவை மூலமாக வாழ்வாதாரத்தைத் தக்கவைக்கலாம். இணையத்தையும் பிற இலக்கமுறைத் தொழில்நுட்பங்களையும் சந்தைப்படுத்தவும் தகவல் பரிமாறவும் திறமையாகப் பயன்படுத்தலாம்.

தொடர்புக்கு

துண்டுப் தோர்ஜே, Tundup Dorjey, tundupdorjey@gmail.com

5. முன்சியாரியின் மக்கள்

முன்சியாரியின் மக்கள் நெகிழ்வுறுதி என்றால் என்னவென்று காட்டுகின்றனர்

ஒளிப்படம்: பீனா நிட்வால்

மாட்டி சங்காதன் என்கிற பெண்கள் கூட்டமைப்பு உத்தராகண்ட்டின் பித்தோரகர் மாவட்டத்திலுள்ள முனிசியாரின் கோரிப் பள்ளத்தாக்கில் உள்ளது. உழத்திகள், பெண் நெசவார்கள், பால் உற்பத்தியாளர்கள், காய்கறி வியாபரிகள், தொழில்முனைவோர் ஆகியோரைக் கொண்ட தன்னாட்சிக் கூட்டமைப்பு. இங்குள்ள சமூகத்தினர் பெரும்பாலும் வேளாண்மையையும், கூடுதலாக சுற்றுலாத்துறையையும் சார்ந்துள்ளனர். மாட்டியின் தோற்றம் அரசியல் காரணங்களால் அமைந்தது. ஆணாதிக்கத்தால் பெண்கள் மீது நிகழும் வன்முறையை எதிர்த்துப் கிராமப் பெண்கள் எழுந்ததால் இந்த அமைப்பு உருவானது. பெண்கள் மீதான வன்முறை குடும்ப வன்முறையாகவோ, பாலியல் வன்முறையாகவோ, சாதி சார்ந்ததாகவோ, பெண்களுக்குச் சமநிலையற்ற நிலவுரிமை தொடர்புடையதாகவோ, நீர், காடு, நிலம் சார்ந்தவையாகவோ இருக்கக்கூடும். மாட்டியின் நோக்கம் தனிநபரைத் தாண்டி, உள்ளூர் தன்னாட்சியிலும், இமயச்சூழலில் சூழலியலுக்கேற்ற மக்கள் மைய வளர்ச்சிக்கான திட்டத்தை முடிவுசெய்வதிலும் பெண்களின் பங்களிப்பை உறுதிசெய்வதாகவும் உள்ளது. இங்கு சமூக அமைப்பு மலைக்கிராமப் பொருளாதாரத்தில் பொதிந்துள்ளது. மாட்டிக்கு இதனுடனான தொடர்பு நேரடியானதாகவும் நடைமுறை சார்ந்ததாகவும் உள்ளது. 2004ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2016ல் நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்ட இமாலயன் ஆர்க் என்ற நிறுவனத்திலும் மாட்டியின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். வீட்டுவிடுதிகள் மூலமாகப் பண்பாட்டில் மூழ்கித் திளைக்கும் அனுபவங்களைப் பயணிகளுக்கு இமாலயன் ஆர்க் வழங்குகிறது. இயற்கையையும் சமூகத்தையும் சார்ந்த சுற்றுலா நிறுவனமாகத் தொடங்கப்பட்ட இமாயலயன் ஆர்க் உள்ளூர்க் காடுகளைப் நலமுறப் பாதுகாப்பதிலும், பெண்களுக்குக் கூடுதல் வருமானம் தருவதிலும் பங்காற்றுகிறது.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

பெருந்தொற்றால் ஏற்பட்ட பொதுமுடக்கம் உலகம் முழுவதும் சுற்றுலாத்துறைக்குப் பேரிடியாக இறங்கியது. சுற்றுலாவைச் சார்ந்திருந்த முன்சியாரி சமூகமும் பாதிக்கப்பட்டது.

ஒளிப்படம்: பீனா நிட்வால்

அவர்களது வருமானத்தில் சரிவு ஏற்பட்டது. “பெருந்தொற்றையும் பொதுமுடக்கத்தையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டியது அவசியம்,” என்கிறார் மாட்டியின் நிறுவனரான மலிகா விர்தி. “பெருந்தொற்று இன்னமும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் பொதுமுடக்கம்தான் எங்களைப் பாதித்தது.” விர்தி இமாலயன் ஆர்க் நிறுவனத்தின் நிறுவனர்-இயக்குனர், ஊரக இந்தியாவின் குரல்கள் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவர், தற்சமயம் சர்மோலி ஜைந்திவன் ஊராட்சியின் தலைவராகவும் உள்ளார்.

பொதுமுடக்கத்தையும் வருமான இழப்பையும் எதிர்கொள்ள இச்சமூகத்தினர் ஊரக இந்தியாவின் குரல்கள் என்ற தளத்தை, இந்தியாவின் பிறபகுதிகளிலிருந்த ஐந்து அமைப்புகளோடு சேர்ந்து தொடங்கினர். கிராமத்துக் குரல்களின் சுதந்திரத்தைச் சித்தரிக்கும் வண்ணம், இது சுதந்திர தினத்தன்று தொடங்கப்பட்டது. சமூகம்-சார் வீட்டுவிடுதி உரிமையாளர்கள் தங்களது கதைகளைப் பகிர்ந்துகொண்டு, சிறிதளவேனும் வருமானத்தை ஈட்டுவதற்கான தளமாக இது அமைந்தது. இங்கு தங்களது கட்டுரைகளைப் பதிப்பிப்பதன் மூலம், வீட்டுவிடுதி உரிமையாளர்கள் தங்கள் முதல் கட்டுரைக்கு 1000 ரூபாயும், இரண்டாவது கட்டுரைக்கு 1500 ரூபாயும், மூன்றாவது கட்டுரைக்கு 2000 ரூபாயும் பெறலாம். அதன்மூலம் தொடர்ச்சியான ஊரக ஊடகப் பணி ஊக்குவிக்கப்படுகிறது. பணம் தருவதோடு, ஊரகப் பகுதிகளிலுள்ள ஆண்களும் பெண்களும் இலக்கமுறைப் படிப்பறிவு பெறுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. பங்கெடுக்கும் ஒவ்வொரு அமைப்பும் மாதத்துக்கு 5 கட்டுரைகளை வழங்கவேண்டும். அமைப்புகளும் தள ஆசிரியர்களும் தன்னார்வ முறையில் செயல்படுகின்றனர்.

“கிராமங்களில் ஆற்றல் உண்டு ஆனால் சரியான கருவிகள் இல்லை,” என்று கூறுகிறார் விர்தி. இலக்கமுறை அறிவாலும் கட்டமைப்பாலும் ஊரகப்பகுதி மக்களும் நகர்ப்புற மக்களுக்குச் சமமாக வரமுடியும் என்று நம்புகிறார். இலக்கமுறை இடைவெளி இருப்பதை அவர் அங்கீகரிக்கிறார்; இந்த இடைவெளியை நீக்கச் சமூகக்குழு கணினி மையத்தை அமைத்துள்ளது. “பள்ளிகள் மூடப்பட்டபோது எல்லா வகுப்புகளும் இணையம் மூலம் நடத்தப்பட்டன,” என்கிறார் மாட்டியின் உறுப்பினரான கஞ்சன் ஆர்யா. “ஆனால் நிறைய குழந்தைகளிடம் கைப்பேசிகளோ கணினிகளோ இல்லை. எனவே நாங்கள் 4 கணிப்பொறிகளும் ஒரு கைப்பேசியும் 1 அச்சு இயந்திரமும் வாங்கி இணைய வகுப்புகளை எங்கள் கணினி மையத்தில் தொடங்கினோம்.”

சுற்றுலாத்துறை சார்ந்த வருமான இழப்பு, இலக்குமுறைக் கல்வி ஆகியவற்றின் உடனடிப் பாதிப்புகளை எதிர்கொண்டதோடு, இச்சமூகக்குழு உள்ளூர் வேளாண்மையையும் கூட்டமைப்பு முறை மூலம் வலுப்படுத்தியது. உணவுத்தேவைக்குச் சந்தையைச் சார்ந்திருத்தல் அதிகரித்தபோதும், உணவுக் கோன்மையை தனது மைய அக்கறைகளில் ஒன்றாகத் தொடர்ந்து வைத்துள்ளது. உள்ளூர் உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தி சுற்றுலாத்துறை வருமானம் சரிந்தபோதும் மக்கள் சமாளித்துக்கொள்ள உதவியது. உணவு உற்பத்தியும் மண்வளமும் சுற்றுப்புறக் காடுகளிலிருந்து

கிட்டும் ஊட்டச்சத்துகளைச் சார்ந்துள்ளன. குறிஞ்சிநில வேளாண்மைக்கும் உயிர் பிழைத்தலுக்கும் வனப்பஞ்சாயத்துகளின் இன்றியமையாமையை பொதுமுடக்கம் உறுதிசெய்தது. "சிறுவிவசாயிகளின் கூட்டமைப்பை ஒருவரையொருவர் ஆதரித்து உதவும் பொருட்டு அமைத்துள்ளோம்," என்கிறார் கமலா பாண்டே. தனித்தனியே வேளாண்மை செய்தவர்கள் இப்போது ஒருங்கிணைந்து ஒருவரையொருவர் ஆதரித்து, சந்தைக்கான பயிர் செய்யாமல் தமக்கான பயிர்களை விளைவிக்கின்றனர். விதைகளையும் உரங்களையும் பகிர்ந்துகொள்கின்றனர். வேளாண்மை மீதான கவனம் அதிகரித்ததால், இச்சமூகம் பொதுமுடக்கத்தை வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு உள்ளூர் உணவுப் பொருள்களும் கைவினைப் பொருள்களும் விற்பது தடைப்பட்டதால். மூலிகைகள், உணவுப்பொருள்கள், கம்பளிப் பொருள்கள் ஆகிய உள்ளூர் பொருள்களை இன்ஸ்டாகிராம் பக்கம் மூலமாக விற்கத்தொடங்கினர். இதன் பயன்பாட்டை பொதுமுடக்கத்தின் போதே பழகினர்.

படிப்பினை

ஊரகக் குறிஞ்சிநிலச் சமூகங்கள் பிழைத்திருப்பதற்கு உள்ளூர் வேளாண்-சூழலியல் நிலையைக் குறித்த அறிதல் அவசியம். கூட்டு வேளாண்மையும், உள்ளூர் தற்சார்பு வேளாண்மையும் சமூகங்களை இந்தப் பேரிடரைச் சமாளிக்க உதவியுள்ளன. இலக்கமுறை அறிவின் தேவையை இப்பொதுமுடக்கம் வலியுறுத்தியுள்ளது. ஊரகச் சமூகங்களுக்கு இலக்கமுறை ஆற்றல் இருந்தபோதும் கட்டமைப்பில் குறை இருக்கலாம். இலக்கமுறை இடைவெளியை இட்டுநிரப்புவதன் மூலம் கிராமக் குரல்களை வலுப்படுத்த முடியும். சுற்றுலாத்துறை ஒரு சரிவைச் சந்தித்துள்ளது. ஆனால் இலக்கமுறை வலுவூட்டல், உள்ளூர் வேளாண்மையை வலுப்படுத்தல், இயற்கை வளங்கள் மீதும் பொதுக்காடுகள் மீதும் கவனம் குவத்தல் போன்ற மாற்றுமுறைகள் சுற்றுலாத்துறை-சார் சமூகங்களைத் தக்கவைக்க உதவும். பக்கச்சாய்வுடைய பலவீனமான சந்தையில் உள்ளூர்மயப்படுத்தலும் தற்சார்பு வேளாண்மையும் வலுவாகச் செயல்படும் திறனை வெளிக்காட்டியுள்ளன.

தொடர்புக்கு

மலிகா விர்தி, Malika Virdi, malika.virdi@gmail.com.

ஒளிப்படம்: பீனா நிட்வால்

6. ஸ்பிட்டியின் மக்கள்

பெருந்தொற்றை எதிர்கொள்ளும்பொருட்டு தன்னாட்சியை மேற்கொண்டுள்ளனர் ஸ்பிட்டியின் மக்கள்

ஒளிப்படம்: சோனம் தார்கே, வ.வ.த.மு உறுப்பினர்

வடகிழக்கு இமாச்சல பிரதேசத்தில் இமயத்தின் உயரங்களில் அமைந்துள்ள ஸ்பிட்டி பல பழங்குடி மக்களின் வாழிடமாக உள்ளது. அவர்கள் வேளாண்மையிலும் சுற்றுலா சார்ந்த வாழ்வாதாரங்களிலும் ஈடுபட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் ஸ்பிட்டியின் ஆதி வேளாண்குடிகள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய பணப்பயிர்களை வளர்க்கத்தொடங்கினர். பணப்பயிர் வேளாண்மை சந்தையைப் பெருமளவு சார்ந்துள்ளது; வெளியுலகுடன் ஊடாடவேண்டியதையும் அவசியமாக்குகிறது. இப்பகுதியில் பரவலாக உள்ள சுற்றுலா சார்ந்த தொழில்களும் எல்லைகளைக் கடந்த ஊடாடத்தை அவசியமாக்குகின்றன. ஆனால், பெருந்தொற்றின் வரவுக்குப் பின்னர், இச்சமூகத்தினர் தாமே சுமத்திக்கொண்ட பொதுமுடக்கம் வேளாண்மை முறைகளை மாற்றியதோடு வாழ்வாதாரங்களையும் வாழ்க்கை முறைகளையும் மாற்றியது.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

பெருந்தொற்று தாக்கியபோது, முதலில் ஸ்பிட்டியின் தொலைதூரமும் அணுகமுடியாமையும் குறைந்த வளங்களும் வளர்ச்சிகுன்றிய கட்டமைப்பும் இருந்ததால் அதன் உள்ளூர் மக்களின் வலுவற்ற நிலையை மேலும் வலுவிழக்கச்செய்தது. நாட்டின் பிற பகுதிகளுக்கு ஏதுவாக அமைக்கப்பட்ட விதிகளும், வழிமுறைகளும், கொள்கைகளும் அப்பகுதிக்குப் போதுமானவையாக இருக்காது என்பதை உள்ளூர் மக்கள் விரைவிலேயே உணர்ந்தனர்.

உடல்நலம், வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு, ஆதிக்குடிகளின் பொதுநலன் ஆகியவற்றை உறுதிசெய்ய மாற்று வழிகள் தேவைப்பட்டன. மாற்று முறைக்கான தேவையை உணர்ந்த உள்ளூர் மக்கள் தன்னாட்சியையும் சமூகக்குழுத் தலைமையையும் மேற்கொண்டு பெருந்தொற்றின் பாதிப்புகளை எதிர்கொண்டனர்.

சுய ஒருங்கிணைப்புடன் குடிமக்களால் வழிநடத்தப்படும் ‘வளங்குன்றா வளர்ச்சிக்கும் தடுப்பு முறைகளுக்குமான குழு’ (வ.வ.த.மு - CPMSD) என்ற ஓர் அமைப்புசாரா தன்னார்வ ஆளுகை அமைப்பை உருவாக்கியதே தன்னாட்சியை நோக்கிய முதற்படி. இக்குழு ஏற்கனவே உள்ள அரசாங்க அமைப்புகளோடு இணைந்து செயல்படுகிறது. இரு அடுக்குகளில் இக்குழு செயல்பட்டது. முதல் அடுக்கில் ஒரு பெரிய குழு அமைக்கப்பட்டது. இக்குழு பல உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. உள்ளூர் ஊராட்சியின் பிரதிநிதிகள், ஊர்த் தலைவர்கள், மகளிர் குழுக்கள், இளைஞர் குழுக்கள், வணிகர் குழுக்கள், ஸ்பிட்டி விடுதி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், வீட்டுவிடுதிகள், டாக்ஸி சங்கங்கள், தன்னார்வ நிறுவனங்கள், ஐம்பெரும் கோன்பாக்களைச் (கீ, கோமிக், தங்கர், தபோ, குங்கிரி ஆகிய புத்த மடாலயங்கள்) சார்ந்த லாமாக்கள் இந்த முதல் அடுக்கில் இடம்பெற்றனர். களப்பணியின்போது முடிவெடுத்தல், தலைமை, செயல்படுத்துதல் ஆகியவற்றை எளிதாக்க இப்பெருங்குழுவின் உறுப்பினர்கள் 12 உறுப்பினர்கள் கொண்ட வல்லுனர் குழுவைத் தேர்ந்தெடுத்தனர்.

நாடுதழுவிய முதல் பொதுமுடக்கம் அறிவிக்கப்படுவதற்குப் பல வாரங்கள் முன்பாகவே இக்குழுவின் தலைமையின் கீழ், உள்ளூர்ப் பழங்குடியினர் ஸ்பிட்டி அளவில் தனிமைப்படுத்தலை அறிமுகப்படுத்தத் தாமாகவே ஒருமனதாக முடிவுசெய்தனர்.

தாமாக ஏற்றுக்கொண்ட தனிமைப்படுத்தலை அதிகாரப்பரவலாக்கத்துடன் செயல்படுத்தினர். தொடர்புடையோர் அனைவரும் முனைப்புடன் கலந்துகொண்டனர். எல்லா கிராமங்களிலும் தனிமைப்படுத்தலைப் பற்றிய தகவல்களைப் பரப்பினர். அத்தியாவசியமற்ற சேவைகளான சில தொழில்களும் சுற்றுலாத்துறையும் முடக்கப்பட்டன. மார்ச் மத்தியில் சில வேற்றுநாட்டு, வேற்றுமாநிலப் பயணிகள் இன்னமும் பள்ளத்தாக்கில் இருக்கும்போதே இச்செயல்முறை முடுக்கிவிடப்பட்டதால், அவர்கள் தமது நாடுகளுக்கும் வீடுகளுக்கும் பாதுகாப்புடன் திரும்புவதற்கான உதவிகளை இக்குழு செய்தது. ஸ்பிட்டியின் நுழைவாயில்களை 2020 ஏப்ரில் முதல் அக்டோபர் வரை ஏழு மாதங்களுக்கு உள்ளூர் தன்னார்வலர்கள் ரோந்துப்பணி செய்து கண்காணித்தனர்.

ஸ்பிட்டியின் வேளாண் சமூகம் பச்சைப் பட்டாணி போன்ற பணப்பயிர்களையே பொதுவாக சார்ந்துள்ளனர். அவையே அவர்களுக்கு முதன்மை வாழ்வாதாரம். பணப்பயிர் வேளாண்மை அதிக உழைப்பைக் கோருவது. போக்குவரத்துக்கும் விற்பனைக்கு புற விநியோகச்சங்கிலியைச் சார்ந்துள்ளது. பணப்பயிர் சாகுபடியை பொதுமுடக்கத்தின் போதும் தொடர்ந்திருந்தால் மொத்த சமூகத்தையும் தொற்றுக்கான ஆபத்துக்கு உட்படுத்தியிருக்கவேண்டும். இதை மனதில் கொண்டு, உள்ளூர் மக்கள் தமது வேளாண் முறைகளை மாற்றி, தற்சார்பை நோக்கி கவனத்தைத் திருப்பினர்.

ஒளிப்படம்: சோனம் தார்கே, வ.வ.த.மு உறுப்பினர்

பல்வேறு கிராமங்களில் பல உழவர்களும் பச்சைப்பட்டாணிக்குப் பதிலாக கரும்பட்டாணி வாற்கோதுமை (பார்லி) போன்ற மரபுப்பயிர்களைப் பயிரிட்டனர். இவையே இப்பகுதியின் பருவச்சூழலுக்கு ஏற்றதாகவும் வறட்சி தாங்குவனவாகவும் உள்ளன. "இவ்வாண்டு எங்கள் வேளாண்முறைகளில் நடந்த பெருமாற்றங்களில் ஒன்று இதுதான். மரபுப்பயிர்களுக்குத் திரும்பினோம். இங்குள்ள பெரிய கிராமங்களில் ஒன்றான காசாவில் எங்கள் கூட்டு முடிவுக்குப் பின்னர் எவருமே பச்சைப் பட்டாணியைப் பயிரிடவில்லை," என்கிறார் உள்ளூர் மகிளா மண்டலின் உறுப்பினரான தோல்கர்.

எதிர்காலத்தில், பெருந்தொற்றுக்கு அப்பாலான செயல்களையும் எடுத்துக்கொள்வது என்று இக்குழு முடிவுசெய்துள்ளது. ஒன்றுக்கொன்று தொடர்புடைய சமூக-பொருளாதாரப் பிரச்சனைகள், சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம், பிற குடிமைச் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பெருந்தொற்று முடிந்தபிறகும் தொடர்வதற்கு அவர்கள் முனைகின்றனர். "பெருந்தொற்றுக்கு அப்பாலும் எங்கள் பணியைத் தொடரும் எண்ணத்தில் உள்ளோம். ஏற்கனவே உள்ள அமைப்புகளுக்கு இணைக்கோட்டில் நாங்களும் பணிசெய்வதென்றிருக்கிறோம்," என்று வ.வ.த.மு. குழுவின் உறுப்பினரான சோனம் தார்கே கூறுகிறார், "உள்ளூர் மக்கள் இக்குழுவின் பணியில் பெரும் நம்பிக்கையைக் காட்டியுள்ளனர். இதை எதிர்காலத்திலும் தக்கவைக்க வேண்டும்."

படிப்பினை

உள்ளூர் தன்னாட்சியும் அதிகார பரவலாக்கமும் பெருந்தொற்று, பொதுமுடக்கம் போன்ற அமைப்பியல் ரீதியான சவால்களைச் சந்திப்பதில் சிறப்பாகச் செயல்படுகின்றன. மரபான அறிதல்களையும் பரவலாக்கப்பட்ட முடிவெடுக்கும் செயல்முறையாலும் உள்ளூர் சமூகக்குழுக்கள் ஒரு திறமான எதிர்ப்பு முறையை உருவாக்கிக்கொள்ளமுடியும். சந்தைசார் அமைப்பைத்தாண்டி மரபான வேளாண்முறைகளால் தற்சார்பை எட்டமுடியும்.

தொடர்புக்கு

செமி லமோ, Chemi Lhamo, மின்னஞ்சல்: chemi5lhamo@gmail.com or chemi@ncf-india.org. கைப்பேசி எண்: 7982943928

ஒளிப்படம்: சோனம் தார்கே, வ.வ.த.மு உறுப்பினர்

7. மக்கள் அறிவியல் நிறுவனம்

உத்தராகண்டின் ஊற்றுகளைப் பெண்கள் மீட்டுள்ளனர்

ஒளிப்படம்: பகவதி பாண்டே, ம.அ.நி.

இலாபநோக்கற்ற ஆய்வு மற்றும் வளர்ச்சி அமைப்பான மக்கள் அறிவியல் நிறுவனம் (PSI - ம.அ.நி.) சமூக வழிநடத்தலில் இயங்கும் நீர்நிலை சார்ந்த வாழ்வாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் தரக்கண்காணிப்பு, பேரிடர்தாங்கும் வீடுகள், பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பரப்புதல் ஆகியவற்றில் தீவிரமாகப் பணியாற்றிவருகின்றது. நாடு முழுவதும் விரவியுள்ள இந்நிறுவனம் இமய மாநிலங்களான உத்தராகண்ட், இமாச்சல பிரதேசம் ஆகியவற்றின் மீது தனிக்கவினம் கொண்டுள்ளது.

ம.அ.நி. ஏழைகளுக்கு அதிகாரம்வழங்கி வறுமையை ஒழிப்பதையும், மனித வளங்களையும் இயற்கை வளங்களையும் வளங்குன்றாமலும் நியாயமான முறையிலும் செயல்திறனோடு பயன்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்த குறிக்கோளை அடைய, சமூகக்குழுக்களுக்கும் அமைப்புகளுக்கும் தொழில்நுட்ப உதவியும் மேலாண்மையும் வழங்கி, வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி, பொதுநல ஆய்வும் கொள்கை ஆய்வும் மேற்கொண்டு வருகிறது.

பெருந்தொற்றின் பின்விளைவு

பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதுமே, இந்நிறுவனம் தனது நிவாரணப் பணிகளைத் தொடங்கியது. கோதுமை மாவு, அரிசி, எண்ணெய், பருப்புகள், குளியல் சோப், துவைக்கும் சோப், பெண்களுக்கான சுகாதாரப் பட்டைகள், தேயிலை போன்ற பொருள்கள் 70 கிராமங்களிலும், 10 நகர்ப்புறக் குடியிருப்புப்பகுதிகளிலும் வழங்கப்பட்டன. உத்தராகண்டிலுள்ள பாகேஷ்வர், தேராடூன், பௌரி, ருத்ரபிரயாக், நைனிடால், அல்மோரா, பிதொரகர் ஆகிய பகுதிகளிலும் இமாச்சல பிரதேசத்தின் சோலன் பகுதியிலும் இப்பணிகள் நடந்தன. புலம்பெயர் தொழிலாளர்கள் திரும்பியபோது தனிமைப்படுத்திக் கொள்வதற்கான கட்டமைப்பையும் வழங்கின. தங்கள் ஆய்வுக்கூடங்களில் தூய்மியை (சானிட்டைசர்) உற்பத்தி செய்வதிலும் பங்காற்றினர். முகக்கவசங்களோடு தூய்மியும் தொலைத்தூர கிராமங்களுக்கு வழங்கப்பட்டது. பெருந்தொற்று குறித்தும் கூடல் இடைவெளி குறித்தும்

ஒளிப்படம்: பகவதி பாண்டே, ம.அ.நி.

வேளாண் குடும்பங்களிடையேயும் புலம்பெயர் தொழிலாளர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் இந்நிறுவனம் வெற்றிகண்டது.

இலக்குப்பகுதிகளில் இருந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு இடைக்கால ஆதரவு வழங்குவதையும் இந்நிறுவனம் வெற்றிகரமாகச் செய்தது. கோவிட்-19 இமயப்பகுதிகளின் வேளாண்துறையை வெகுவாக பாதித்தது. ம.அ.நி.குழு செய்த விரைவு மதிப்பீட்டின் மூலம் அண்மைய இளவேனிற்கால அறுவடைக்குப் பின்னர் இயந்திரங்களும் போக்குவரத்தும் இல்லாததால் வேளாண் செயல்பாடுகள், குறிப்பாகக் கதிரடித்தல், மிகவும் தடைப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தனர்.

இதைக் கருத்தில் கொண்டு, ம.அ.நி. குழு தலையிட்டு கதிரடித்தல், விற்பனை என்று அறுவடைக்குப் பின்னான ஆதரவினை நல்கி 300 குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கமுடிந்தது. பருவமழைக்காலப் (காரீஃப்) பயிர்களுக்குத் தேவையான விதைகளையும் உத்தராகண்டின் ருத்பிரயாக், பாகேஷ்வர் ஆகிய மாவட்டங்களில் வழங்கினர். பருப்பு வகைகள், மக்காச்சோளம், நெல் ஆகியவற்றுக்கு 3 குவிண்டால் விதைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

எனினும் ம.அ.நி. பணியில் மிகவும் உள எழுச்சியூட்டும் பகுதி உத்தராகண்டின் தண்ணீர்ப் பிரச்சனையை எதிர்கொள்ளும் பணிதான்; பெருந்தொற்றின் போதும் அப்பணி நின்றுபோகவில்லை. நிதி அயோக், அக்குவாடேம் ஆகியவை பதிப்பிக்கும் நீரூற்று வரைபடத்திலுள்ள தரவுகளைக் கொண்டு தனது இலக்குப் பகுதிகளைக் குறித்த செய்திகளை ம.அ.நி. சேகரிக்கிறது. பௌரி, கார்வால், நைனிடால், பித்தொரகர், அல்மோரா ஆகிய பகுதிகளில் முதன்மையாக இப்பணி நடக்கிறது. புத்துயிர்ப்பு அடைய வேண்டிய பகுதிகளைப் பற்றிய தரவுகளை சமூகத்திலிருந்தே திரட்டுவதால் இதில் சமூகக்குழுக்களின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. நீரின் அளவு, தரம் ஆகிய இரண்டின் மீதும் கவனம் குவிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் நடைபெறவேண்டிய நீரியல், சமூகப்பொருளாதாரக் கணக்கெடுப்பின் மூலம் இன்றியமையாத ஊற்றுகளை இறுதிசெய்வது அடுத்த கட்டம்.

இதில்தான் சமூக மக்களைத் திரட்டுவது தொடங்குகிறது. தெருக்கூத்துகள், உள்ளூர் மொழிகளில் மக்களிசைப் பாடல்கள், விழிப்புணர்வுப் பரப்புரை மூலம் உள்ளூர் மக்களிடம் நீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க நீரூற்றுகள் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமா என்ற வினா எழுப்பப்படுகிறது. ஆண்களும் பெண்களும் கொண்ட நீர்ப்பயனர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஊற்றுகளைக் கவனித்துக்கொள்ள அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஆண்கள், பெண்கள் இருவருக்கும் வருமானம் கிட்ட வழிசெய்து இம்முடிவினை நோக்கி நகர்த்துவதுதான் நோக்கம். நிலவியலாளர்கள், பொறியாளர்கள், சமூக விஞ்ஞானிகள் ஆகியோர் நீரூற்றுகளின் அமைப்பையும் நீர்ப்பிடிப்புப் பரப்பையும் வடிவமைத்து, சூழலமைப்புக்கேற்ற பதன நடவடிக்கைகளை எடுத்தாலும்கூட, சமூகக்குழுவும் முடிவெடுத்தலில் சமமாக ஈடுபடுத்தப்பட்டு, ஊற்றுகளைக் கட்டவும் பராமரிக்கவும் செய்கின்றனர்.

பருவமழையின் போது பயிற்சி தொடர்வதற்கு பெருந்தொற்று தடையாக இருந்தது - இதுவே நீரூற்றுகளின் மீளூட்டத்துக்கு மிகவும் இன்றியமையாத காலம். ஆனால் வாட்சாப், சூம் மூலம் மெய்நிகர் பயிற்சி வழங்கப்பட்டு ஊற்று மீளூட்டம் தொடர்ந்தது. பயிற்சிபெற்ற பொறியாளர்கள், நிலவியலாளர்கள்,

சமூக விஞ்ஞானிகள் ஆகியோரில் பொதுவாகச் செய்யப்படும் ஊற்று மீளூட்டம் சார்ந்த தொழில்நுட்பப் பணிகள்கூடச் சமூகப் பணியாளர்களுக்குக் காணொளிகள் ஒளிப்படங்கள் போன்ற எளிமையான தொழில்நுட்பங்கள் மூலம் கற்றுத்தரப்பட்டன. இதன்மூலம் ஆள்பலம் கூடியது; சமூகக்குழு உறுப்பினர்களிடையே, குறிப்பாகப் பெண்களிடையே, நம்பிக்கை வளர்ந்தது. இத்தகைய தொழில்நுட்பப் பணிகளிலும் நீர்த்தேக்க வரைபடங்களின் தயாரிப்பிலும் பெரும்பாலும் ஆண்களோ துறை வல்லுனர்களோ ஆதிக்கம் செலுத்துவார்கள். தோழில்நுட்பம் மூலமாகவும் புதுமையான தகவல்பரிமாற்ற முறைகளாலும், இத்தகைய இக்கட்டான சமயத்தில் கிராமச் சமூகங்களுக்கும் பெண் ஊழியர்களுக்கும் துறையறிவைக் கடத்த முடிந்திருக்கிறது. ஆண்களை விட அதிகமாகப் பெண்கள் வேலைகளை இழந்திருப்பதாலும், மெய்நிகர் பயில்தலுக்கான வாய்ப்புகள் பெண்களுக்கு இல்லை என்பதாலும் பெருந்தொற்றால் பெண்களே அதிகம் பாதிப்படையக்கூடியவர்களாக இருக்கின்றனர். இத்தகைய சூழலில் ஆண் ஆதிக்கம் செலுத்தும் தொழில்நுட்பம்சார் பணிகளில் பெண்கள் மெய்நிகர் பயிற்சி மூலம் மட்டுமே ஈடுபடுவதென்பது பாராட்டத்தக்கது.

படிப்பினை

நேர் பயிற்சியும் மெய்நிகர் பயிற்சியும் ஒரு புதுவித நம்பிக்கையையும், தகுதிகளையும் திறன்களையும் சமூக உறுப்பினர்களிடம் வளர்த்துள்ளன. சமூகப்பங்களிப்பால் மட்டுமே நீரூற்றுகளின் மீளூட்டத்திற்கு இவை வழிவகுத்துள்ளன. தண்ணீர்ப் பற்றாக்குறை வெற்றிகரமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. மெய்நிகர் பயிற்சி மூலமாக, பெண்களால் ஆண் ஆதிக்கம் செலுத்தும் தொழில்நுட்பம்சார் துறையிலும் வெற்றிகரமாகச் செயல்படமுடியும்; அதனால் அவர்களது நம்பிக்கை வளரும்.

தொடர்புக்கு

ரோஷன் ராத்தோட், Roshan Rathod, roshi.rathod@gmail.com
மற்றும் psiddoon@gmail.com.

ஒளிப்படம்: பகவதி பாண்டே, ம.அ.நி.

8. மேரு, ஹனுப்பட்டா கிராமங்களில் பனிச்சிறுத்தைப் பாதுகாப்புக்கான ஆதரவு

லடாக்கில் உள்ளூர் பெண்களும் புலம்திரும்பிய தொழிலாளர்களும் வளங்குன்றா வாழ்வை நோக்கி நகர்கின்றனர்

ஒளிப்படம்: சஞ்சை பூட்டியா

பனிச்சிறுத்தைப் பாதுகாப்பு - இந்திய அறக்கட்டளை (ப.சி.பா.-இ.அ - SLC-IT) (http://snowleopardindia.org/) என்ற அமைப்பு பனிச்சிறுத்தையைப் (Panthera uncia) பற்றிப் புரிந்துகொண்டு பாதுகாப்பதற்காகப் பணியாற்றுகிறது. பனிச்சிறுத்தை மத்திய, தென் ஆசியாவில் இமயத்தின் உயர்ந்த பகுதிகளின் கரடுமுரடான சரிவுகளைச் சார்ந்த பெரிய விலங்கு. 2009ம் ஆண்டு தொடங்கப்பட்ட ப.சி.பா.இ.அ. சமூகக்குழுசார் பாதுகாப்பு அணுகுமுறையை எடுத்துள்ளது. லடாக் பகுதியில் தீவிரமாகச் செயல்படுகிறது.

ஆண்டுதோறும், ப.சி.பா.இ.அ. லடாக்கில் ஹனுப்பட்டா, மேரு, ஹிம்யா, லமயாரு போன்ற கிராமங்களில் பெண்களுக்கு கைவினைகளிலும் கைத்தறியிலும் பயிற்சியளிக்கிறது. இப்பயிற்சிகள் கிராமப் பெண்களை வலுப்படுத்தி அவர்களுக்கு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை வழங்கவேண்டும் என்பதற்காக நடத்தப்படுகின்றன. உள்ளூர்ச் சமூகங்கள் தங்களது மரபார்ந்த கலைகளையும் கைவினைகளையும் விளம்பரப்படுத்தி முன்னிறுத்துவதற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது; கைவினைப் பொருள்களின் விற்பனை மூலம் கிட்டும் வருமானம் பனிச்சிறுத்தைகளால் கால்நடைகள் வேட்டையாடப்பட்டு நேரும் இழப்பை ஓரளவு ஈடுகட்டுகிறது.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

கோவிட்-19 பொதுமுடக்கத்தால் இந்த அமைப்பு ஆரம்பத்தில் பயிற்சிகளை நிறுத்திவைத்தது. ஆனால் கிராமத்துப் பெண்கள் அவர்களைத் தொடர்பு கொண்டு உலர்ஊசி கம்பளிப்பின்னல் நெசவு செய்யப் பயிற்சி வேண்டும் என்று கேட்டனர் - இதற்கு முன்பு இதை அவர்கள் செய்ததே இல்லை. இக்கைவினையால் ஊசியும் கம்பளியும் கொண்டு முப்பரிணாமப் பொருள்களைச் செய்யலாம்.

ஒளிப்படம்: அன்சாரா அஞ்சும்

ஒளிப்படம்: அன்சாரா அஞ்சும்

பொதுமுடக்கத்தின் போது ஏதேனும் பயனுள்ளதாகச் செய்யவேண்டும் என்று பெண்கள் விரும்பினர். அடுத்த சுற்றுலாப் பருவத்தின்போது அவர்களது பொருள்களைப் பயணிகளுக்கு விற்கமுடியும். பெண்களின் உற்சாகம் ப.சி.பா.வை பொதுமுடக்கத்தின் போதும் பயிற்சிகள் வழங்கத் தூண்டியது. கூடுதல் கவனத்தோடும் முன்னெச்சரிக்கைகளோடும் பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

ஆச்சரியகரமாக, முந்தைய ஆண்டுகளைவிட அதிகமான பெண்கள் இவ்வாண்டு பயிற்சியில் கலந்துகொண்டனர். பெண்களோடு சேர்ந்து பொதுமுடக்கத்தால் புலம்திரும்பிய தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

லே நகருக்கும் பிற சந்தைகளுக்கும் பயணம் செய்வதை பொதுமுடக்கம் தடுத்ததால், பெண்கள் தங்கள் கைவினைக்குத் தேவையான கம்பளி நூல் போன்றவற்றை தங்களது வீடுகளிலிருந்தும் உள்ளூர் ஆடுகள், கவரிமாக்களிடமிருந்து தருவித்துக்கொண்டனர். தங்களுக்குத் தேவையான மூலப்பொருள்களுக்குப் பெண்கள் சந்தையைச் சார்ந்திருக்கவில்லை. எல்லாவற்றையும் தங்கள் வீடுகளிலிருந்தே எங்கும் வெளியில் செல்லாமல் பெற்றுக்கொண்டனர்.

அண்மை ஆண்டுகளில், லடாக்கில் சந்தையின் பங்கு அதிகரித்து அதன்மீதான சார்பு வளர்ந்துள்ளது. பொதுமுடக்கத்தின் உடனடி விளைவுகளில் ஒன்று காய்கறிகளின் வரத்து நின்றுபோனதுதான். பொதுமுடக்கம் பல வகைகளில் நம் விழிகளைத் திறந்தது. உண்ணக்கூடிய வேர்களுக்கும், மூலிகைகளுக்கும், கனிகளுக்கும், காய்கறிகளுக்கும் மலைகள் பிறப்பிடமாக உள்ளன. உலர்ஊசி நெய்தல் பயிற்சியோடு, ஹிம்வா கிராமப் பெண்களுக்கு மலைத் தாவரங்கள் எப்படிச் சந்தைக் காய்கறிகளுக்கு மாற்றாக முடியும் என்பதும் விளக்கப்பட்டது. மலைகளிலிருந்து காய்கறிகளையும் மூலிகைகளும் சேகரிப்பதற்கு வழிகாட்டப்பட்டனர். மேம்பட்ட உடல்நலத்தோடும் வளங்குன்றா வழியிலும் குறைந்த செலவில் குடும்பங்களைப் பேணப் பெண்களால் முடிந்தது.

படிப்பினைகள்

எதிர்காலத்தை நிகழ்காலத்துள் கொணர்ந்து அது குறித்து ஏதேனும் செய்ய முனைவதே திட்டமிடுதல் ஆகும். இக்கிராமங்களின் பெண்கள் பொதுமுடக்கத்தின் போது கிடைத்த நேரத்தை அடுத்த சுற்றுலாக் காலத்தில் விற்பதற்கான பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தினர். புற உள்ளீடுகள் எவையும் இல்லாமல், உள்ளூர் அறிவையும் வேளாண்-சூழலியல் நிலையையும் தங்களைத் தற்காத்துக் கொள்ளப் பயன்படுத்தியுள்ளனர்.

தொடர்புக்கு

அன்சாரா அஞ்சும், Anzara Anjum, anzaraa@gmail.com

9. கங்காவின் (Kanga) வளரிளம் பெண்கள்

பெருந்தொற்றின்போது கங்காவின் வளரிளம் பெண்களின் கதை

ஒளிப்படம்: ஜகோரி கிராமீன்

சில பிரிவு மக்கள் பிறரை விடவும் பொருளாதார ரீதியாக வலுவற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை கோவிட்-19 பெருந்தொற்றுத் தெளிவுபடுத்தியுள்ளது. அதன் தாக்கம் நமது சாதி, வர்க்கம், பாலினம் ஆகியவை சார்ந்து சமமற்று இருப்பதை உணர்கிறோம். வளரிளம் பெண்களின் அனுபவம் இந்த நோக்கில் கவனத்துக்குரியது. ஏற்கனவே அவர்கள் உடல்நலம் சார்ந்து பல தடைகளைச் சந்திக்கின்றனர். இரும்புச்சத்துக் குறைவு, ஊட்டச்சத்துக் குறைவு ஆகியவை சிறுவர்களைக் காட்டிலும் சிறுமிகளிடம் அதிகம் காணப்படுகிறது. இளமடந்தையரும் (வளரிளம் பெண்கள்) பெண்களும் ஏற்கனவே விளம்புநிலையில்தான் இருக்கின்றனர். இத்தகைய நெருக்கடியின் போது அவர்களது இன்னல்கள் மேலும் அதகமாகின்றன. பலவற்றையும் இழக்கும் நிலைக்கு ஆளாகின்றனர். அவசரமானவை என்று கருதப்படும் பிற பிரச்சனைகளால் இதுவரை பெண்ணுரிமை சார்ந்து ஏற்பட்ட முன்னேற்றமெல்லாம் இழந்துவிடும் சாத்தியம் உள்ளது. அவர்களது நலன்களுக்கும், பாதுகாப்புக்கும், சமவயதினர் தரும் ஆதரவுக்கும் நேர்ந்துள்ள இடர்ப்பாட்டினை நாம் ஏற்கனவே உணரலாம்.

ஜகோரி ஊரகக் கொடை அறக்கட்டளை (ஜ.ஊ.கொ.அ) இமாச்சலத்தின் கங்க்ரா மாவட்டத்திலுள்ள எல்லா சமூகக்குழுக்களோடும் பணியாற்றுகிறது. பாலினம், வர்க்கம், சாதி, மதம், உடல்குறைபாடு, பிற சமூகநிலைகள் சார்ந்து செய்யப்படும் பாகுபாடுகள் அனைத்துத்தையும் எதிர்கொள்ளும் நோக்கோடு செயல்படுகிறது. விழிப்புணர்வுற்ற வளரிளம் பெண்களின் நீதிக்கான செயல்பாடு (வி.வ.பெ.நீ.செ - AAGAJ) திட்டத்தின் பகுதியாக இவ்வமைப்பு கொரோனா இடரால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் ஒன்றாக மடந்தையரை அடையாளப்படுத்தியுள்ளது. பொதுமுடக்கம் தொடங்கியபோது, இவ்வமைப்பு கங்கா மாவட்டத்திலுள்ள ரைட், நக்ரோட்டா சுரிய், தரம்சாலா, கங்க்ரா ஆகிய நான்கு வட்டங்களில் உள்ள மடந்தையரைச் சென்றடைய முயற்சிகள் எடுத்தது.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

இளமடந்தையர் தங்களது நண்பர்கள், சமவயதினர், கூட்டமைப்புகள் ஆகியவற்றிலிருந்து ஆதரவு தேட முனைகின்றனர். ஆனால், பொதுமுடக்கம் அவர்களைத் தனிமைப்படுத்தியது. இளம் பெண்கள் மீதான பாலியல் வன்செயல்கள் முடங்கிய வீடுகளுக்குள்ளும் வெறிச்சோடிய வீதிகளிலும் அதிகரித்திருப்பதாக செய்திகள் வரத்தொடங்கின. பொதுமுடக்கக் காலத்தில் மடந்தையர், குழந்தைகள், பெண்கள் ஆகியோரிடமிருந்து வன்முறையிலிருந்து காக்க அவசர உதவிகோரி வந்த இன்னல் அழைப்புகள் அதிகரித்திருந்தன. ‘சைல்ட்லைன் இந்தியா’வுக்கு ஏப்ரில் மாதத்தில் மட்டும் 92,000 இன்னல் அழைப்புகள் உதவிகோரி வந்தன.

குடும்ப வருமானம் வீழ்ந்ததால், இளம்பெண்கள் பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் இடைநிற்கும் அபாயமும் அதிகரித்து, கல்வியிலிருந்த பாலின இடைவெளி பெருகியிருந்தது. இலக்கமுறை இடைவெளியிலும் பாலினக் கூறு உண்டு. சிறுமிகளிடம் திறன்பேசிகளும் இணைய இணைப்பும் இருப்பதற்கான வாய்ப்புகள் ஒப்புநோக்கக் குறைவு. கங்க்ராவிலும் இதே நிலைதான். பொதுமுடக்கத்தின் விளைவாக சிறுமியரின் குடும்பப்பொறுப்புகளும் அதிகரித்தன; அறுவடைப் பணியும் வந்ததால் மாணவியர் படிப்பது மேலும் கடினமானது. வீட்டில் ஏற்பட்ட உளஅழுத்தமும் அவர்களுக்கான தனியிடம் இல்லாமையும் சிறுமியரைப் பாதித்து, படிப்பதைக் கடினமாக்கியது. இணையக் கல்வி சவால் நிறைந்ததாக இருப்பதால் இளவயதிலேயே திருமணம் செய்துவிடும் கட்டாயமும் கூடியிருக்கிறது. சிறுமியர் மத்தியில் உடல் தொந்தரவுகளும், உளச் சிக்கல்களும் பெருகியுள்ளன. ஏற்கனவே கணிசமான சிறுமியரும் பெண்களும் இரத்தசோகை கொண்டவர்களாக இருக்கையில், குடும்ப வருமான இழப்புகளும் வாழ்க்கைத்தர வீழ்ச்சியும் அவர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தை மேலும் அரிதாக்குகின்றன.

“நான் 12ம் வகுப்பில் தேரிவிட்டேன். எனக்கு மேலும் படிக்கவேண்டும் என்று ஆசைதான். ஆனால் என் கிராமத்திலிருந்து கல்லூரி தொலைவில் உள்ளது,” என்கிறார் இப்பகுதியைச் சேர்ந்த வந்தனா என்ற இளம்பெண். “நான் ஆண்பிள்ளையாக இருந்திருந்திருந்தால், உயர்ப்படிப்புக்குச் செல்ல என் பெற்றோர்கள் அனுமதித்திருக்கக்கூடும். இவ்வாண்டு கல்லூரியில் சேர்த்துவிடுமாறு அவர்களிடம் போராடிக்கொண்டிருந்தேன். ஆனால் பெருந்தொற்றால் இனி நான் கல்லூரியில் சேரவே முடியாது போலுள்ளது.”

சிக்கா என்று 15-வயதுச் சிறுமி கூறுகிறாள், “வீட்டில் படிப்பது மிகுந்த சவாலாக உள்ளது. எனக்கு இரண்டு தம்பிதங்கையர் உள்ளனர். பகல்பொழுதில் அவர்களது படிப்பில் உதவுகிறேன். வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்யவேண்டும். விவசாயப் பணிகளும் உள்ளன. எல்லா வேலையும் முடிந்தபிறகு இரவு 9 மணிக்கு மேல்தான் என்னால் படிக்கமுடிகிறது.”

ஒளிப்படம்: ஜகோரி கிராமீன்

பொதுமுடக்கம் மாதவிடாயப் பொருள்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் குலைத்திருக்கிறது. “எங்கள் வீட்டருகில் இருந்த ஓடையில் தூமைத் துணிகளைத் துவைத்துக்கொண்டிருந்தோம்,” என்கிறார் ஜோதி. “ஆனால் பொதுமுடக்கத்தால் கிராமத்தில் எப்போதும் எல்லாரும் இருப்பதால், ஓடையைச் சுற்றிலும் ஆட்கள் இருந்துகொண்டே இருக்கிறார்கள். எங்களுக்கு அங்கு சென்று குளித்து, துவைப்பது, குறிப்பாக தூமைத்துணிகளைத் துவைபதற்குச் சிரமமாக உள்ளது. மற்றவர்கள் இருக்கும்போது தூமைத்துணிகளைத் துவைப்பதற்கு எனக்குப் பயமாக இருப்பதால் அதிகாலையிலேயே எழுந்து 5 மணிக்கு முன்னதாகவே குளித்துவிடுவேன்.”

மடந்தையரின் ஊட்டத்தேவைகளை நிறைவேற்ற ஜகோரி முனைந்துள்ளது. ஊட்டச்சத்து தேவைகளையும் மாதவிடாய்ச் சவால்களையும் சமாளிப்பதற்காகச் சுகாதாரப் பட்டைப் பொட்டலங்களையும், ஊட்டமிகு உணவுகளையும் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு பையிலும் சிறுமிகளுக்கான ஒரு கடிதமும், குடும்ப வன்முறையின் போது உதவிக்கு அழைக்கத் தேவையான தொலைப்பேசி எண்களைக் கொண்ட துண்டறிக்கைகளும் உள்ளன. 780 ஊட்டமிகு உணவுப் பொட்டலங்களும் சுகாதாரப் பட்டைகளும் வளரிளம் பெண்களுக்கு வழங்கப்பட்டன. உடல்நலம் மனநலம் குடும்ப வன்முறை குறித்துச் சிறுமியர் விழிப்புணர்வு அடைய வைத்தனர்.

படிப்பினைகள்

பொதுவான நெருக்கடியிலிருந்து சிறுமியர் சந்திக்கும் தொல்லைகளைத் தனிமைப்படுத்த முடியாதெனினும் அவர்களது கூடுதல் இக்கட்டையும் ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நெருக்கடி, தனிநபர் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் வளரிளம் பெண்களின் போராட்டங்களைப் பெருக்கியிருக்கிறது. குடும்பங்களில் நிலவும் ஆண்வழிமரபுச் சிக்கலே வளரிளம் பெண்கள் சந்திக்கும் பல பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது - ஊட்டச்சத்துக் குறைபாடாகட்டும், கல்வியாகட்டும், குடும்ப வன்முறையாகட்டும். இங்கிருந்து நாம் முன்னே செல்லும்போது, வளரிளம் பெண்களின் தேவைகளையும், அவர்கள் குழந்தைப் பருவம், வளரிளம் பருவம், இளமைப் பருவம் ஆகியவை சந்திக்கும் புள்ளியில் உள்ளனர் என்பதையும் புரிந்துகொண்டு நமது செயல்பாடுகளை அமைக்கவேண்டும்.

தொடர்புக்கு

அர்க்கினா சிங், Arkina Singh, arkina98@gmail.com
சுகாசினி பாலி, Suhasini Bali, balisuhasini@gmail.com
மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
AAGAJ (Aware Adolescent Girls Action for Justice) திட்டம், ஜகோரி கிராமீன்.

ஒளிப்படம்: ஜகோரி கிராமீன்

10. காஷ்மீரத்துப் பறவைகள் - சூழல்நலச் சுற்றுலா, வாழ்வாதார மாற்று

காஷ்மீரத்துப் பறவைகள் சூழல்நலச் சுற்றுலாவுக்கும் வாழ்வாதாரத்துக்கும் வழிவகுக்கின்றன

ஒளிப்படம்: இர்பான் ஜீலானி

வணிகரீதியான சுற்றுலாவுக்கு மாற்றாக பறவை நோக்கலும் பறவைநோக்கல் சுற்றுலாவும் அண்மைக் காலங்களில் உருவெடுத்துள்ளன. ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் குழு சுற்றுலாத்துறையில் பறவை நோக்கலின் முக்கியமான பங்கினையும், வளரும் நாடுகளில் உள்ளூர்ச் சமுகங்களுக்கு அதனால் கிடைக்கும் நேரடி, மறைமுக பொருளாதார நன்மைகளையும் அங்கீகரித்துள்ளது. காஷ்மீரில் சமூகத்துக்கும் சூழலியலுக்கும் நலம் தரும் இத்தகையதொரு சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கான வாய்ப்பு அதிகம். பொதுமுடக்கம் இத்திசையில் ஒரு தொடக்கத்தைக் கண்டது. இந்தியாவின் புகழ்பெற்ற பறவையியலாளரான சலீம் அலி ஒருமுறை காஷ்மீரை 'வலசைப் பறவைகளுக்கு மண்மீது உள்ள சொர்க்கம்' என்றார். ஆண்டுதோறும் பத்து லட்சத்துகும் மேற்பட்ட வலசைப் பறவைகள் காஷ்மீரின் சதுப்புநிலங்களை இடைநிலை முகாம்களாகப் பயன்படுத்துகின்றன.

'காஷ்மீரத்துப் பறவைகள்' இர்பான் ஜீலானியால் பொதுமுடக்கத்தின் போது தொடங்கப்பட்டது. பறவை நோக்கர்களை ஈர்ப்பதும், பிற சுற்றுலாப் பயணிகளிடம் பறவைகளை அறிமுகப்படுத்துவதும் இதன் நோக்கம். சூழல்நலத்துடனும் வளங்குன்றாமலும் வாழ்வாதாரங்களை உருவாக்கும் எண்ணமும் இருந்தது.

32 வயதுப் பறவை ஆர்வலரான ஜீலானி காஷ்தீரின் கந்தெர்பாம் மாவட்டத்திலுள்ள சிறுநகரமான கங்கனைச் சேர்ந்தவர். அவருக்கு மலையேற்றத்தில் ஆர்வமுண்டு. பல மலையேற்றக் குழுக்களோடு காஷ்மீரில் மலையேற்றப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். "மலையேறும் போது, இயற்கையைக் கவனித்து படங்கள் எடுப்பேன்," என்கிறார் அவர். "ஒளிப்படம் எடுப்பது எனது பேரார்வமானது. தாவரங்கள், விலங்குகள் குறித்துப் படிக்கத்தொடங்கினேன். ஆனால் பறவைகள் குறித்து உள்ளூர் மக்களால் பெரிய ஆய்வுகள் செய்யப்படவில்லை என்பதையறிந்தபோது ஏமாற்றமுற்றேன். இங்குள்ள எல்லா ஆய்வுகளும் வெளிநாட்டவராலேயே செய்யப்பட்டுள்ளன."

ஒளிப்படம்: இர்பான் ஜீலானி

ஜீலானி சமூக ஊடகங்களில் ஒளிப்படங்களைப் பதிவிடத் தொடங்கினார். காஷ்மீர் பள்ளத்தாக்கில் 243 வகைப் பறவையினங்களைப் படமெடுத்தார். அது தேசிய, சர்வதேச பறவை நோக்கர்களின் கவனத்தை ஈர்த்தது. சர்வன்தீப் சிங் அப்படி ஈர்க்கப்பட்டவர். ஜீலானி பின்னர் அவரோடு பணியாற்றிப் பல நுட்பங்களைத் தெரிந்துகொண்டார்.

பெருந்தொற்றின் பின்விளைவுகள்

பெருந்தொற்று ஏற்பட்டபோது, எல்லாரும் வீட்டினுள் முடங்கவேண்டியிருந்தது. சுற்றுலாத்துறைக்கும், அதனைச் சார்ந்திருந்த சமூகத்தினருக்கும் பொதுமுடக்கம் மிகவும் கடினமான காலம். தங்கள் எதிர்காலம் குறித்து இளைஞர்களுக்கு நிச்சயமின்மை ஏற்பட்டது; வேலைவாய்ப்பின்மை உச்சத்தைத்தொட்டது. அப்போதுதான் ஜீலானி 'மாடியிலிருந்து பறவை பார்த்தல் அல்லது கொல்லைப்புறத்தில் பறவை பார்த்தல்' என்ற சிந்தனைக்கு உருக்கொடுத்தார். “நோக்கர்களை ஈர்த்து இப்பகுதியின் பறவைகளைப் பரிச்சயப்படுத்துவதுதான் எனது நோக்கம்,” என்கிறார் அவர், “புதுமையான எதையேனும் படமெடுத்து எங்கள் சமூக வலைத்தளத்தில் பதிவிடுவதற்கான அற்புதமான வாய்ப்பை இது அளிக்கிறது.” இக்கரு ஒரு கூடலகமாக உருவெடுத்தது - காஷ்மீரத்துப் பறவைகள்.

ஜீலானி இக்குழுவை காஷ்மீருக்குள் மட்டும் என்று கட்டுப்படுத்தவில்லை. அப்படிச்செய்த பிற குழுக்களில் குறைந்த அளவு பங்கேற்பே இருக்கும். ஒரு பெரிய குழுவை உருவாக்கி, இளைஞர்கள் தங்கள் பணியை வெளிக்காட்ட ஒரு தளத்தை ஏற்படுத்தி தொழில்முறை வல்லுனர்களாக இத்துறையில் அவர்கள் செயல்பட வழிகாட்டுவதே ஜீலானியின் நோக்கம். அதில் அவர் வெற்றியும் பெற்றார். காஷ்மீரத்துப் பறவைகள் குழுவில் இன்று பல நாடுகளிலிருந்தும் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

காஷ்மீரத்துப் பறவைகள் குழு விரிவடையத் தொடங்கியபோது, ஜீலானிக்கு பறவை ஆர்வலர்களிடமிருந்து பறவைச்சுற்றுலாவுக்கான அழைப்புகள் வரத்தொடங்கின. இப்பகுதி இளைஞர்களுக்கு நிலையான வருவாய் தரக்கூடிய வாய்ப்பாக ஜீலானி இதைப் பார்த்தார். அவர் 30-40 இளைஞர்களோடு பணியாற்றி, பறவை ஆர்வலர்களுக்கும் பிற பயணிகளுக்கும் வழிகாட்ட அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கிறார். பலவேளைகளில் சுற்றுலாக் குழுக்கள் இந்த இளைஞர்களுக்குக் கட்டணம் கொடுக்கின்றனர்.

“காஷ்மீரில் செழிப்பான உயிரிப் பன்மயம் உள்ளது. பல்வகைப் பறவையினங்கள் உள்ளன. அவற்றில் பலவும் காஷ்மீருக்குத் தனித்துவமானவை,” என்கிறார் ஜீலானி. “காஷ்மீரத்துப் பறவைகள் குழு விரிவடைந்தபிறகு, பறவைச் சுற்றுலாக்களுக்கும் பிற இயற்கைச் சுற்றுலாக்களுக்கும் நாங்கள் பல விண்ணப்பங்களைப் பெற்றுள்ளோம். இத்தகைய சுற்றுலாக்கள் ஐரோப்பாவில் ஒரு போக்காக உருவெடுத்துள்ளன. சூழல்நலச் சுற்றுலாக்கள் சிலவற்றையும் நாங்கள் தொடங்கி, பறவை நோக்கர்களை அவர்கள் விரும்பிய இலக்குக்கு நேரடியாக அழைத்துச் செல்கிறோம். இப்பகுதி மக்களுக்கு இது வருமானம் ஈட்டித்தருகிறது.”

நிலையான வருமானம் இருந்தபோதும், பெருந்தொற்றின் காரணமாக பயணிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியே வைத்துள்ளனர். பின்னர் சூழல் வளங்குன்றா வேலைவாய்ப்பாக இது விரித்தெடுக்கப்படலாம்.

படிப்பினைகள்

பெருந்தொற்றின் இடையூறுகளைத் தாண்டி நிலையான வேலைவாய்ப்பும் வருமானமும் சாத்தியம். உள்ளூர் இளைஞர்களும் சமூகங்களும் தங்களது உள்ளூர் அறிவினைத் திரட்டிச் சமூகநல, சூழல்நல சுற்றுலாவை ஊக்குவிக்கலாம். பயணிகளின் எண்ணிக்கையையும் மனதில் கொள்ளவேண்டும்.

ஒளிப்படம்: இர்பான் ஜீலானி

இந்த ஆவணம் ரித்விக்கா பத்கிரி, ஆத்யா சிங் ஆகியோரால் தொகுக்கப்பட்டிருக்கிறது. சுஜாதா பத்மநாபன், ரோஷன் ராத்தோட், சஞ்சை சோந்தி, ஷேக் குலாம் ரசூல், த்ஸேவாங் நம்கெய்ல், சிருஷ்டி பாஜபய், டாஷி மொருப், அபா பையா, பிஜு நேகி ஆகியோருக்கும் அவர்களது உள்ளீடுகளுக்கு நன்றி. அன்சாரா அஞ்சும், மலிக்கா விர்டி, அனிதா பால், கல்யாண் பால், இர்பான் ஜீலானி. ஆதர்ஷ் கிருஷ்ணன், லுப்னா குவாத்ரி, ஆசிப் அகமத், அர்கினா சிங், சுகாசினி பாலி, சேமி லாமோ, ரேக்கா ரௌடேலா, பீனா நிட்வால், கம்லா பாண்டே, கஞ்சன் ஆர்யா, புஷ்பா சும்தியால், தண்டுப் தோர்ஜே, கேசர் சிங், தௌகீர் ஆலம் லோதா, சுனீதா காஷ்யப் ஆகியோரது ஒத்துழைப்பின்றி இந்த ஆவணம் சாத்தியமாகியிருக்காது. வடிவமைப்பும் தளவமைப்பும் - நவீத் ததன்
மொழிபெயர்ப்பு - த.கண்ணன்

இப்பதிப்புக்கான ஆதரவு வழங்கியவர்கள் ஹென்ரிக் போல் அறக்கட்டளை, மிசெரியோர்

‘சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்’ தொடரின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு: ஆஷிஷ் கோத்தாரி, ashishkothari@riseup.net

மேற்கோள் காட்ட: விகல்ப் சங்கம், மேற்கு இமயப் பகுதியில் பெருந்தொற்றுக்கெதிரான நெகிழ்வுறுதி - 'சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: பெருந்தொற்றுக்கும் பொதுமுடக்கத்துக்கும் அப்பால்' தொடரின் மூன்றாவது தொகுதி; விகல்ப் சங்கம் மையக் குழு, பூனா, பிப்ரவரி 2021

இது காப்புரிமையற்ற பதிப்பு. வணிகநோக்கற்ற செயல்பாடுகளுக்காக யார்வேண்டுமானாலும் தாராளமாகப்பயன்படுத்தலாம். உரிய மேற்கோள்களோடு அங்கீகாரம் கொடுத்தல் நலம். மேற்கோள் காட்டும்போது இதே போல காப்புரிமையற்று இருக்கவேண்டும்.

For the first two volumes of the series (in multiple languages, and in graphic novel form), see:
சாதாரண மக்களின் அசாதாரணமான பணிகள்: தொகுதி 1, சித்திர நாவல்
சமூக வன உரிமைகளும் பெருந்தொற்றும்: வழிநடத்தும் கிராம சபைகள்: தொகுதி 2, சித்திர நாவல்

விகல்ப் சங்கம் நியாயமான, சமநீதி கொண்ட, வளங்குன்றா வழிகளின் மூலம் மனித, சூழலியல் நலம் விழையும் இயக்கங்கள், குழுக்கள், தனிநபர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் ஒரு தளம். இது தற்போதைய வளர்ச்சி மாதிரியையும், அதன் அடிநாதமாக உள்ள ஏற்றதாழ்வுகளையும் அநீதியையும் கொண்ட அமைப்பினையும் நிராகரிக்கிறது. நடைமுறையிலும் நோக்கத்திலும் புதிய மாற்றுகளுக்கான தேடலில் உள்ளது. மையக் குழுவில் நாடெங்கிலுமிருந்து 70 அமைப்புகளும் இயக்கங்களும் உறுப்பினர்களாக உள்ளனர். (பட்டியல் கீழே)

மேலும் விபரங்களுக்குப் பார்க்கவும்:
http://www.vikalpsangam.org/about/

www.vikalpsangam.org

- ACCORD (Tamil Nadu)
- Alliance for Sustainable and Holistic Agriculture (national)
- Alternative Law Forum (Bengaluru)
- Ashoka Trust for Research in Ecology and the Environment (Bengaluru)
- BHASHA (Gujarat)
- Bhoomi College (Bengaluru)
- Blue Ribbon Movement (Mumbai)
- Centre for Education and Documentation (Mumbai)
- Centre for Environment Education (Gujarat)
- Centre for Equity Studies (Delhi)
- CGNetSwara (Chhattisgarh)
- Chalakudypuzha Samrakshana Samithi / River Research Centre (Kerala)
- ComMutiny: The Youth Collective (Delhi)
- Deccan Development Society (Telangana)
- Deer Park (Himachal Pradesh)
- Development Alternatives (Delhi)
- Dharamitra (Maharashtra)
- Ekta Parishad (several states)
- Ektha (Chennai)
- EQUATIONS (Bengaluru)
- Extinction Rebellion India (national)
- Gene Campaign (Delhi)
- Goonj (Delhi)
- Greenpeace India (Bengaluru)
- Health Swaraaj Samvaad (national)
- Ideosync (Delhi)
- Jagori Rural (Himachal Pradesh)
- Kalpavriksh (Maharashtra)
- Knowledge in Civil Society (national)
- Kriti Team (Delhi)
- Ladakh Arts and Media Organisation (Ladakh)
- Local Futures (Ladakh)
- Maadhyam (Delhi)
- Maati (Uttarakhand)
- Mahila Kisan Adhikar Manch (national)
- Mahalir Association for Literacy, Awareness and Rights (MALAR)
- Mazdoor Kisan Shakti Sangathan (Rajasthan)
- National Alliance of Peoples' Movements (national)
- Nirangal (Tamil Nadu)
- North East Slow Food and Agrobiodiversity Society (Meghalaya)
- People's Resource Centre (Delhi)
- Peoples' Science Institute (Uttarakhand)
- Revitalising Rainfed Agriculture Network (national)
- reStore (Chennai)
- Sahjeevan (Kachchh)
- Sambhaavnaa (Himachal Pradesh)
- Samvedana (Maharashtra)
- Sangama (Bengaluru)
- Sangat (Delhi)
- School for Democracy (Rajasthan)
- School for Rural Development and Environment (Kashmir)
- Shikshantar (Rajasthan)
- Snow Leopard Conservancy India Trust (Ladakh)
- Sikkim Indigenous Lepcha Women's Association
- Social Entrepreneurship Association (Tamil Nadu)
- SOPPECOM (Maharashtra)
- South Asian Dialogue on Ecological Democracy (Delhi)
- Students' Environmental and Cultural Movement of Ladakh (Ladakh)
- Thanal (Kerala)
- Timbaktu Collective (Andhra Pradesh)
- Titli Trust (Uttarakhand)
- Tribal Health Initiative (Tamil Nadu)
- URMUL (Rajasthan)
- Vrikshamitra (Maharashtra)
- Watershed Support Services and Activities Network (Andhra Pradesh/Telangana)
- Youth Alliance (Delhi)
- Yugma Network (national)
- Let India Breathe
- Travellers' University
- Dinesh Abrol
- Sushma Iyengar